# யாழ்நாதம்

இதழ் 12

2006



வெளியீடு

'யாழ் இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்கம் கொழும்பு'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



புது வருட மலிவு விற்பனை: பிரதம அதிதிகளாக வருகை தந்த திரு. கேசுநாதன் திருமதி புஷ்பராணி கேசுநாதனுடன். குறிப்பு பக்கம் 47



தேநீர் விருந்து: ஆசிரியைகளான 'செல்வி இந்திரா பாலசிங்கம் – திருமதி சாவித்திரி மகேசன்' ஆகியோருடன். குறிப்பு பக்கம் 52

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் நாதம்

இதழ் 12 2006

இதழின் உள்ளே ............

2. கல்லூரியின் கண்கள்

3. தலைவியின் வாழ்த்து

4. கம்பன் புகழ் விருது

5. கொழும்பு கம்பன் கழகத்தின் 2005ஆம் ஆண்டு கம்பன் விழா

6. அறிமுக மடல்: திருமதி அபிராமி கயிலாசபிள்ளை

8. திருமதி அபிராமி கயிலாசபிள்ளை அவர்களின் ஏற்புரை

11. வாழ்த்துகிறோம்

12. மகிழ்ச்சியும், வாழ்த்தும், பாராட்டும், நன்றியும்

13. இந்து ஒளி வாழ்த்துகிறது

14. தன்னலமற்ற சமூகசேவகியை வாழ்த்துகின்றோம்

16. இறை வழிபாடு

18. சித்தனைக்கடங்காத சித்தர்

19. அபிஷேக அன்னதான காவற் தெய்வம் 'கந்தன்'

24. திருப்புள்ளிருக்கு வேளூர்

31. கன்னியாகுமரி அம்மன் கோவிலும் அதன் ஸ்தல புராணமும்

33. யௌவன பருவத்தில் தூய்மையைப் பாதுகாத்துக் கொள்வோம்

36. Quotations Sayings and aphorisms on Teachers & teaching

37. தாய்க்கு முதல் வணக்கம்

38. வடகம்

39. ஊறுகாய்

40. ஜன்னல் ஓர ஸீட்டு!

42. யா.இ.ம.க. ப.மா.ச அவுஸ்திரேலியாவின் பாராட்டு

43. பன்னிரண்டாம் ஆண்டு அறிக்கை

59. இளமையில் கல்வி சிலையில் எழுத்து

60. திருக்கேதீச்சரத் திருத்தலத்தில் மீளமைக்கப்பட்டுள்ள திருவாசக மடத் திறப்பு விழா

"நான் இங்கு வசிக்கிறேன். இவ்விடம் அழகாக இருக்கும்."

"It ought to be beautiful, I live here"

வெளியீடு–

'யாழ் இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்கம் கொழும்பு'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்லூரியின் கண்கள்

திருமதி அபிராமி கயிலாசபிள்ளை: திருமதி சரஸ்வதி ஜெயராஜா

நாம் கல்வி கற்ற யாழ் இந்து மகளிர் கல்லூரி யாழ் நகரில் சிறந்து விளங்கும் கல்லூரிகளில் ஒன்றாகத் திகழ்கின்றது. எங்கள் கல்லூரியின் புகழுக்கு இக் கல்லூரியில் கடமை ஆற்றிய, ஆற்றுகின்ற அதிபர்கள், ஆசிரியைகள் இக் கல்லூரியில் கல்வி கற்ற, கற்கின்ற மாணவிகள் ஆகியோரின் திறமை முக்கிய பங்களிக்கின்றது.

தற்சமயம் கல்லூரிக்குப் புகழீட்டிய பெண்களில் சிறந்தவர்களாகவும் கல்லூரியின் கண்களாகவும் திருமதி அபிராமி கயிலாசபிள்ளையும் திருமதி சரஸ்வதி ஜெயராஜாவும் விளங்குகின்றனர்.

எங்கள் கல்லூரிப் பழைய மாணவி திருமதி அபிராமி கயிலாசபிள்ளை அகில இலங்கையிலும் கம்பன் புகழ் விருது பெற்ற முதல் நபர் ஆவார். இவ்விருது அவரது தன்னலமற்ற சேவையின் பிரதிபலிப்பாகும். ஒரு பெண்ணால் இவ்வளவு காரியங்களும் ஈடேற்றமுடியுமா என பலரும் வியக்கும் வண்ணம் பல அமைப்புகளுடன் சேர்ந்து சமூகசேவை ஆற்றிவருகின்றார். இதையிட்டு எங்கள் கல்லூரியும் எங்கள் சங்கமும் மிகவும் பெருமிதமடைகின்றன. இவரது சேவை தொடர நாம் வாழ்த்துகின்றோம்.

திருமதி சரஸ்வதி ஜெயராஜா எங்கள் கல்லூரியின் அதிபராக 1993ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 21ஆம் திகதி பதவியேற்றார். அன்றிலிருந்து அவர் கல்லூரியின் வளர்ச்சிக்கு அயராது உழைத்து 2006ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 15ஆம் திகதி இளைப்பாறினார். இவர் யாழ் நகரில் ஏற்படும் கஷ்டங்களையும் இடையூறுகளையும் எதிர்கொண்டு மன உறுதியுடன் தன் கடமைகளைச் செய்து கல்லூரியின் புகழ்காத்த உத்தம அதிபராவார். இவரின் பதவிக்காலத்தில் இவர் எங்கள் சங்க உறுப்பினர்களுடன் ஒரு சகோதரிபோலப் பழகி கல்லூரியின் தேவையறிந்து நாம் எம் கல்லூரித்தாய்க்கு உதவிய மனநிறைவைப் பெற உறுதுணையாக இருந்தார். இவரை அதிபராகப் பெற்றது எங்கள் கல்லூரியினதும் எங்கள் சங்கத்தினதும் வரப்பிரசாதமே. வேலையிலிருந்து ஓய்வு பெற்ற இவரது வாழ்க்கை சந்தோஷகரமாக அமைய நடுத்தோட்ட இராஜவரோதயப் பிள்ளையார் அருள்பாலிப்பாராக!

என்றும்போல் யாழ்நாத சஞ்சிகையைச் சீர்செய்து அட்டையை அழகுற அமைத்த யூனிஆட்ஸ் நிறுவனத்திற்கும் அதன் உரிமையாளர் திரு. பொ. விமலேந்திரன் அவர்கட்கும் நாம் நன்றி நவில்கின்றோம்.

*61/2, Abdul Gaffoor Mawatha*
*Colombo 3*

*திருமதி சிவகாமி அம்பலவாணர்*
*மலர் ஆசிரியை*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



jpUkjp rj;jpanyl;Rkp rptypq;fk;

# தலைவியின் வாழ்த்து

இவ்வாண்டு யாழ்நாதம் பன்னிரண்டாவது இதழாக வெளிவருகின்றது. எமது சங்கத்தின் நிகழ்வுகளின் பதிவேடாகவும், பழைய மாணவிகளின் ஆக்கங்களை வெளிக்கொணரும் அறிவுக் களஞ்சியமாகவும் இச்சஞ்சிகை ஆண்டுக்கு ஒரு முறை தொடர்ந்து வெளிவருவது எமக்கு பெருமகிழ்ச்சியை தருகிறது.

எமக்கு எழுத்தறிவு ஊட்டி, எமது வாழ்வுக்கு அடித்தளம் இட்டு, எம்மை வளர்த்துவிட்ட எமது கல்லூரித் தாய்க்கு சமர்ப்பணமாக இச்சஞ்சிகை வெளியிடப்பட்டு வருகிறது. அறுபது ஆண்டுகளுக்கு மேலாக அரிய சேவையாற்றி உயரிய பெண்களை உருவாக்கி வரும் எமது கல்லூரிக்கு அவசியமான உதவிகளை அவ்வப்போது வழங்கி வருவதை எமது பாக்கியமாக கருதுகிறோம்.

பல்லாண்டுகள் எமது கல்லூரியின் அதிபராக கடமையாற்றி ஓய்வு பெற்றுள்ள திருமதி சரஸ்வதி ஜெயராஜ் அவர்கள் எமது சங்கத்துடன் நெருங்கிப்பழகி கல்லூரிக்கு எம்மாலான உதவிகளை வழங்க காரணமாக இருந்தார். யுத்த காலத்தில் எற்பட்ட சீரழிவுகளின்பின் கல்லூரியை மீளகட்டியெழுப்பிய பெருமை இவருக்கு உரியது. கல்லூரியின் சிறந்த அதிபருள் ஒருவராக இவர் என்றும் பாராட்டப்படுவார். அவரது ஒத்துழைப்புக்கு எனது நன்றியை யாழ்நாதத்தில் தெரிவிக்க விரும்புகிறேன்.

யாழ்நாதம் சஞ்சிகை தொடர்ந்தும் சிறப்புடன் வெளிவர வாழ்த்துகிறேன்.

திருமதி அபிராமி கயிலாசபிள்ளை
தலைவி
பழைய மாணவிகள் சங்கம், கொழும்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'கம்பன் புகழ் விருது'

## திருமதி அபிராமி கயிலாசபிள்ளை



தீதறவே துணை செய்யும் தெய்வத் திரு
அணங்கு

ஆதரவு இல்லாரை அன்னையெனத் தோள் தாங்கி
தீதறவே துணை செய்யும் தெய்வத் திரு அணங்கு
பேதமற எல்லார்க்கும் பெருந்தொண்டு இயற்றுகிற
மாதரசி, பெருங்கருணை மனங்கொண்ட மாண்புடையார்.

வழங்கியது :-

திகதி:-2005-05-24 செவ்வாய்க்கிழமை மாலை 5.30 மணிக்கு

நன்றி :- கொழும்பு கம்பன் கழகம் நடாத்தும்
கம்பன் விழா - 2005 அழைப்பிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பு கம்பன் கழகத்தின் 2005ஆம் ஆண்டு கம்பன் விழா

கொழும்பு கம்பன் கழகத்தின் இவ்வாண்டு கம்பன் விழா இம் மாதம் 21, 22, 23, 24 ஆம் திகதிகளில் கொழும்பு வெள்ளவத்தை ஸ்ரீஇராமகிருஷ்ணமிஷன் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பிரபல நாதஸ்வர, தவில் வித்துவான்களின் இன்னிசையுடனும், கல்லூரி மாணவர்களின் கீழைத்தேச வாத்திய இசையுடனும், மங்கையர்களின் நிறைகுட பவனியுடனும், இராமகிருஷ்ண தோட்டம், இல. 11 இல் உள்ள ஸ்ரீ ஐஸ்வர்யலஷ்மி திருக்கோவிலிலிருந்து 21 ஆம் திகதி மாலை 5.00 மணிக்கு விழா மண்டபம் நோக்கி ஆரம்பமாகும் கம்பன் திருவுருவ ஊர்வலத்துடன் இவ்விழா தொடங்கவுள்ளது.

கொழும்பு கம்பன் கழகத்தலைவர் திரு. தெ. ஈஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவை உச்ச நீதிமன்ற முன்னாள் நீதியரசரும் கொழும்பு கம்பன் கழகப் பெருந்தலைவருமான திரு. சி. வி. விக்னேஸ்வரன் தொடக்கி வைக்கவுள்ளார்.

இவ்விழாவில் பல சிறப்பு நிகழ்ச்சிகள் இடம் பெறவிருக்கின்றன. 24ஆம் திகதி சான்றோர் கௌரவம் நடைபெறவுள்ளது.

## கம்பன் புகழ் விருது

எண்ணிலடங்கா சமூக சேவைகளை ஆற்றிவரும் திருமதி அபிராமி கயிலாசபிள்ளை பல்வேறு சமூக சேவை ஸ்தாபனங்களின் பிரதம நிர்வாகியாகவும் செயற்படுகிறார். ஆதரவற்றோருக்கு இவர் ஆற்றும் பணி மகத்தானது. தியாக மனப்பான்மையோடும், கருணையோடும் இவர் பல காலமாக ஆற்றி வரும் பணிகளை மேன்மைப் படுத்தும் வகையில் கொழும்பு கம்பன் கழகம் தான் நிறுவியுள்ள சாதனையாளருக்கான உலகளாவிய விருதாகிய "கம்பன் புகழ்" விருதினை வழங்கி தனது 2005ஆம் ஆண்டு கம்பன் விழாவில் கௌரவிக்கின்றது.

நன்றி :- கலைக்கேசரி 2005-05-13 மற்றும் வீரகேசரி வாரவெளியீடு 2005-05-15 பக்கம் 22

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# அறிமுக மடல்

## திருமதி அபிராமி கயிலாசபிள்ளை

யாழ்ப்பாணம் அராலியில் சுப்பிரமணியம் பர்வதவர்த்தினி தம்பதியினருக்கு மகளாக 1943-06-14 அன்று பிறந்த திருமதி அபிராமி கயிலாசபிள்ளை அவர்கள் தன்னலமற்று தியாகமனப்பான்மையோடு சமுதாயப் பணிகள் பலவற்றை ஆற்றிவருகின்ற பெண்மணியாவார்.

இவர் தனது ஆரம்பக்கல்வியை அராலி சரஸ்வதி வித்தியாலயத்திலும் பின் யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியிலும் பெற்றுக் கொண்டார். அகில இலங்கை இந்துமாமன்றத் தலைவராக விளங்குகின்ற திருமிகு வி. கயிலாசபிள்ளை அவர்களின் துணைவியாரான இவர் ஏ. சி. எஸ் ரெக்னோலொஜிஸ் என்கின்ற கணனிக் கல்வி நிறுவனத்தின் இயக்குனராகவும் விளங்குகின்றார்.

விளம்பர விருப்பமின்றி எண்ணிலடங்கா சமூகசேவைகள் பலவற்றை ஆச்சரியப்படும் வகையில் ஆற்றி வரும் இவர் தான் கல்வி கற்ற யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியின் பழைய மாணவியர் சங்கம், கொழும்பின் தலைவியாக விளங்கி, கல்லூரியின் வளர்ச்சிக்கு பெருந் தொண்டாற்றி வருகின்றார். மேலும் வடக்கு, கிழக்கு மாகாண பாடசாலைகளின் பழைய மாணவர் சங்கங்களது கூட்டமைப்பின் பொருளாளராக விளங்கி, கடும் போரினால் கட்டிடங்களையும், பிறவளங்களையும் இழந்த பல தமிழ்ப் பாடசாலைகளின் புனர்நிர்மாண நடவடிக்கைகளுக்கு தொடர்ச்சியாகப் பணியாற்றியும் வருகின்றார்.

அகில இலங்கை இந்துமாமன்றத்தின் 'ஆதரவற்றோர் விடுதிகள் இல்லக்குழுவின் செயலாளராக பொறுப்பேற்று மன்னார் சித்தி விநாயகர் இல்லம், இரத்மலானை இந்துக்கல்லூரி ஆண்கள்விடுதி, இரத்மலானை சக்தி இல்லம், இரத்மலானை செல்வா இல்லம், முதலிய இல்லங்களில்' ஆதரவற்ற மாணவச் சிறுவர்கள் எவ்வித குறையுமின்றி நல்லநிலையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பராமரிக்கப்படுவதற்கு மிகக்கடுமையாக உழைத்துவரும் இவர்பணி போற்றுதற்குரியது. இவ்வாறே தான் உறுப்பினராக அங்கம் வகிக்கும் மனிதநேய நம்பிக்கை நிதியத்தினூடாக முல்லைத்தீவு இனியவாழ்வு இல்லம், கிளிநொச்சி யோகர்சுவாமி திருவடி நிலையம், கிளிநொச்சி மகாதேவ ஆச்சிரமவிடுதி, கிளிநொச்சி வலுவிழந்தோர் இல்லம், முதலிய ஆதரவற்றோர் நலன்பேணுகை நிலையங்களின் செம்மையான, தொடர்ந்த செயற் பாடுகளுக்கு முதுகெலும்பாய்த் திகழ்ந்து அயராது பாடுபட்டும் வருகின்றார். மேலும் இவர் அங்கவீனச் சிறுவர்கள் இல்லத்தின் உபதலைவராக விளங்கி அச்சிறுவர்களை உகந்தமுறையில் பராமரிக்கும் நடவடிக்கையிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ளார். என்பதும் குறிப்பிடத்தக்கது.

தான் சார்ந்த இந்துமதத்தின் வளர்ச்சிக்கு தன்னாலான பங்களிப்பை நல்கிவருகின்ற திருமதி அபிராமி கயிலாசபிள்ளை அவர்கள் கொழும்பு இந்துமகளிர் மன்றத்தின் போஷகராக இருந்து வருவதோடு திருக்கேதீஸ்வர ஆலயத் திருப்பணிச்சபையின் இணைப்பொருளாளராகவும் விளங்கி வருகின்றார். இவர் அங்கம் வகிக்கும் தற்போதைய திருப்பணிச்சபை, வரலாற்று முக்கியத்துவம் பெற்ற திருக்கேதீஸ்வர ஆலயத்தில் கருங்கற் திருப்பணியை மீளமுன்னெடுத்து வருகின்றது.

தன் அன்பாலும், பண்பாலும் உலகனைத்திலும் உறவையும், நட்பையும் வளர்த்தெடுத்த இவ் அன்னை தன் தனிப்பட்ட அவ்வன்புத் தொடர்புகளை இந்நாட்டில் துயருறும் ஆதரவற்றோருக்கு ஆக்கி தன்னை வெளிப்படுத்தாது, தன்னடக்கத்தோடு செய்துவரும் தொண்டுகள் அளப்பரியன. சமூகசேவையாளராய் தன்னை இனம்காட்டும் நோக்கமில்லாது அன்பு நிறைந்த நெஞ்சத்தால் அனைவருக்காகவும் தன்நோயையும் கருதாது தொண்டாற்றும் தூயர் இவர்.

இவ்வாறு தியாகமனப்பான்மையோடும், கருணையோடும் இலைமறைகாயாய் நின்று தன்னலமற்று பல சமுதாயப் பணிகளை ஆற்றி வருகின்ற திருமதி அபிராமி கயிலாசபிள்ளை அவர்களை இந்நாட்டின் தமிழ் மக்கள் சார்பாக, கொழும்புக் கம்பன் கழகம் தான் நிறுவியுள்ள சாதனையாளருக்கான உலகளாவிய விருதாகிய **"கம்பன் புகழ்"** விருதினை வழங்கி தனது 2005ஆம் ஆண்டுக் கம்பன் விழாவில் கௌரவித்து மகிழ்கிறது.

நன்றி :- கொழும்பு கம்பன் கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# திருமதி அபிராமி கயிலாசபிள்ளை அவர்களின் உரை

முதற்கண் எல்லாம் வல்ல இறைவனை வணங்கிக் கொண்டு, கம்பன் கழகப் பெருந்தலைவர் கௌரவ ஓய்வுபெற்ற உச்ச நீதியரசர் திரு. சி. வி. விக்னேஸ்வரன் அவர்களே, கழகத்தலைவர் திரு. தெ. ஈஸ்வரன் அவர்களே, கம்பவாரிதி இ. ஜெயராஜ் அவர்களே, மற்றும் கம்பன் கழகத் தொண்டர்களே, மேடையில் அமர்ந்திருக்கும் சான்றோர்களே, பெரியோர்களே, சகோதர சகோதரிகளே, குழந்தைகளே உங்கள் எல்லோருக்கும் எனது இனிய மாலை வந்தனம் தெரிவிக்கின்றேன்.

கம்பன் கழகம் கால்நூற்றாண்டு காலமாக இயங்கி முன்பு வருடந்தோறும் இப்போ வருடத்திற்கு 3 முறை கம்பன் விழாவைச் சிறப்பாகக் கொண்டாடி வருவது நாமெல்லோரும் அறிந்த விடயமாகும். எமது நாட்டிலும், தமிழ் நாட்டிலுமிருந்து சிறந்த அறிஞர்களை வரவழைத்து நாம் சிறந்த சொற்பொழிவுகளை கேட்டு மகிழ வைக்கின்றனர். நகைச்சுவை அரியபொருட்சுவை நிறைந்த பட்டிமன்றங்கள், வழக்காடு மன்றங்கள் எம்மெல்லோருக்கும் இனிய விருந்தாக அமைகின்றன. இயல், இசை, நாடகத்தில் சிறந்து விளங்கும் கலைஞர்கள் தமது திறமையை எல்லோரும் மெச்சும் விதத்தில் காட்டுவதற்கு கம்பன் கழகம் ஓர் அரிய சந்தர்ப்பத்தை அளித்து வருகிறது. கம்பன் விழாவின் சிறப்புக்கு நீங்கள் எல்லோரும் இப்படிப் பெருந்திரளாக கூடியிருப்பதே ஒரு சான்றாகும்.

எமது நாட்டில் எமது சமூகத்தவர் பலர் கடந்து சென்ற சில தசாப்தங்களாக மிகவும் கஷ்டநிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள். உள்நாட்டுப் போரினால் பல சிறார்கள் தமது பெற்றோரை இழந்தும், முதியவர்கள் தமது இளஞ்சந்ததியினரை இழந்தும் தவிக்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னும் சிலர் உடல் ஊனமுற்றும், கண்பார்வை, செவிப் புலனை இழந்தும் நிர்க்கதியாக்கப் பட்டிருக்கின்றனர், இவர்கள் எல்லோருக்கும் எம்மாலான உதவிகளைச் செய்து இவர்கள் வாழ்வில் சுபிட்சத்தையும், ஒளியையும் கொடுப்பது எமது கடமையாகும்.

"அறிவினால் ஆகுவதுண்டோ பிறிதன் நோய்
தன்நோய் போல் போற்றாக்கடை"

'பனையாலை விழுந்தவனை மாடேறி மிதித்தது' போல போர் அனர்த்தம், வெள்ளப் பெருக்கால் பாதிக்கப்பட்ட மக்கள் சுனாமிப் பேரலையினால் தமது உடமை, சொந்தம் எல்லாவற்றையும் இழந்து நிற்கிறார்கள். நல்ல நிலையில் இருந்த பல குடும்பங்கள் நடுத்தெருவிற்குத் தள்ளப்பட்ட வரலாறு பெரிய சோகக் கதையாகும். முல்லைத்தீவில்–கள்ளப்பாடு, மட்டக்களப்பில்–நாவலடி, யாழ்ப்பாணத்தில்–செம்பியன்பற்று–மாமுனை, கிளிநொச்சியில்–கல்லாறு முதலிய கிராமங்கள் முற்று முழுதாக அழிந்து காணப்படுகின்றன. இக்கிராமத்து மக்கள் 2004-December-26இல் இப்படி ஒருநிலை தமக்கு வருமென நினைத்துப் பார்த்திருக்கமாட்டார்கள். இது வாழ்க்கை நிலையாமையை எமக்கு உணர்த்துகிறது. எம்மில் யாருக்கும் எப்பொழுதும் இந்நிலை வரலாம் என்பதை நாம் உணர்வதில்லை. இம்மக்கள் தத்தமது தொழிலைப் புரிவதற்கு வழிவகை செய்து கொடுப்பது எம் எல்லோரதும் தலையாய கடமையாகும். இவை யாவற்றையும் குறிக்கோளாக வைத்து எமது சங்கங்கள் இயங்கி வந்தால் கதிகலங்கி நிற்பவர்களின் துயர்களை ஓரளவாவது துடைத்து அவர்களுக்கு நல்ல புனர்வாழ்வைக் கொடுக்க இயலும்.

பொதுச் சேவையில் ஈடுபடும்பொழுது இவர்களுக்கு ஏன் இந்த வேலை இது அரசாங்கத்தால் செய்யப்பட வேண்டிய காரியம் என்று எள்ளி நகையாடுபவர்களும் எம்மில் சிலர் இருக்கிறார்கள். நாமெல்லோரும் இறைவனின் கைகளின் ஒரு கருவியே என்பதை உணர்ந்தால் இது ஒன்றும் நம்மைப் பாதிக்கமாட்டாது.

கம்பன் கழகம் எமது சேவையைப் பாராட்டி விருதினை வழங்குவது இப்படியான சேவையைப் பாராட்டுவதற்கும் சில நல்ல உள்ளங்கள் இருப்பதையே எமக்குக் காட்டுகிறது. இவ்விருது தனி ஒருவருக்குக் கொடுத்த விருதாக நான் கருதவில்லை. நான் அங்கம் வகிக்கும் மனிதநேய நம்பிக்கை நிதியம், அகில இலங்கை இந்து மாமன்றம் Crippled Children's Aid Association ஆகிய நிறுவனங்களுக்கே இது உரியதாகும். எனது கணவரின் ஆதரவும் எனது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்பத்தவரின் ஒத்துழைப்பும் இல்லாவிடில் இப்படியான பணிகளை ஆற்றியிருக்க முடியாது. இவ்வேளையில் நான் படித்த யாழ். இந்து மகளிர் கல்லூரியே இவற்றிற்கெல்லாம் களம் அமைத்துக் கொடுத்ததென்பதையும் மிகவும் பெருமையுடன் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

சேவை என்பது மற்றவர்கள் பாராட்டிக் கௌரவிப்பதற்காக செய்வதொன்று அல்ல. தமது ஆத்ம திருப்திக்காகவே செய்ய வேண்டிய ஒன்றாகும். இப்படிப்பட்ட சேவையை எனது கணவருடன் சேர்ந்து செய்து வருவதற்கு உறுதுணையாக உள்ளது இறைவனின் அருளும் எமது குரு சுவாமி சாந்தானந்த சரஸ்வதியின் ஆசியுமே ஆகும். கம்பன் கழகத்திற்கு எனது நன்றியைக் கூறி இக்கழகம் தமிழுக்குச் செய்யும் அரிய சேவையை மிகவும் பாராட்டுகிறேன். அவர்கள் எனக்குக் கொடுத்த பொற்கிளியை அவர்கள் வருடந்தோறும் கொடுத்துவரும் பரிசு ஒன்றிற்கு வைப்புப்பணமாக எடுத்துக் கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டு இக்கழகத்தினர் ஒருவர் வந்து இதை ஏற்குமாறு கேட்டுக் கொள்கிறேன். நன்றி

கம்பன் கழகம் மேலும் மேலும் சைவத்திற்கும், தமிழுக்கும் தொண்டாற்றி சிறப்புற வேண்டுமென எல்லாம் வல்ல இறைவனை வேண்டி மீண்டும் அவர்களுக்கு நன்றி கூறி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துகின்றோம்

தமிழர் வரலாற்றில் முதன் முறையாய் கம்பன் கழகத்தின்
கம்பன் புகழ் விருதினைப் பெற்ற
எமது பாசத்திற்கும் நேசத்திற்கும் பெருமதிப்புக்குமுரிய.

# திருமதி அபிராமி கயிலாசபிள்ளை

அம்மா

அகில இலங்கை ரீதியில் நீங்கள் அயராது ஆற்றிய சமய, சமூக பணிகளுக்காக கம்பன் கழகத்தினால் வழங்கப்பட்ட இந்த கௌரவத்தை, சிவபூமியான மன்னார் மாவட்டத்தில் வாழும் இந்து சமூகம் தமக்கு வழங்கப்பட்ட கௌரவமாக எண்ணி பெரும் மகிழ்ச்சியடைகிறது. இந்த இனிய நன்நாளில் கௌரி உடனுறை திருக்கேதீச்சர பெருமானின் அருளாலும், ஆசியாலும் சகல சௌபாக்கிய வளங்களும் பெற்று பல்லாண்டு பல்லாண்டு வாழ இறைவனை வேண்டி வாழ்த்துகின்றோம்.

- இந்து ஆலயங்களின் ஒன்றியம், மன்னார் மாவட்டம்.
- சிவதொண்டர் அணி, மன்னார் மாவட்டம்.
- இலண்டன் கனகதுர்க்கை அம்மன் இல்லம், உப்புக்குளம், மன்னார்.
- இலண்டன் கனகதுர்க்கை அம்மன் இலவச நவீன தையல் பயிற்சி நிலையம், பிரதான வீதி, மன்னார்.
- அகில இலங்கை இந்து மாமன்ற மீனவர் நலன் காப்பு நிலையம், பேசாலை.
- பெரியகடை ஞானவைரவர் அறநெறிப் பாடசாலை.
- முசலிசிலாவத்துறை, விநாயகர் அறநெறிப் பாடசாலை.
- இந்து கலாசார நிலையம், மன்னார்.

நன்றி :- வீரகேசரி வாரவெளியீடு 2005ஆம் ஆண்டு யூன் மாதம் 26ஆம் திகதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிழ்ச்சியும் வாழ்த்தும் பாராட்டும் நன்றியும்

"கம்பன் புகழ் விருது - 2005"
பெற்ற எமது பெருமதிப்பிற்குரிய

திருமதி அபிராமி கயிலாசபிள்ளை (பொருளாளர்)

திருக்கேதீச்சர ஆலய திருப்பணிச்சபை

திருமதி அபிராமி கயிலாசபிள்ளை அவர்களுக்கு மட்டற்ற மனப்பூர்வமான வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவிப்பதில் அவரது அயராத சமூகப் பணிகளால் பயன் பெற்ற அன்பர்களுடன் இணைந்து கொள்வதிலே மன்னார் மாவட்டமும் பெருமிதமடைகின்றது. பொதுவாக அகில இலங்கை ரீதியாக அவர் ஆற்றிய அளப்பரிய பணிகளுக்காகவே இவ் விருது வழங்கப்பட்டிருப்பினும் சிறப்பாகவும், குறிப்பாகவும் மன்னார் மாவட்டத்தில் அவர் ஆற்றிய அறப்பணிகளை மனத்திற் கொண்டு பார்க்கையில் அவருக்கு அளிக்கப்பட்ட கௌரவம் என எண்ணிப் புளகாங்கிதமடைகின்றோம்.

இத்தகைய கௌரவத்தை மன்னார் மாவட்டத்துக்கு அளித்த கம்பன் கழகத்துக்கும் கம்பவாரிதி இ. ஜெயராஜ் அவர்களுக்கும் எமது நன்றிகள்.

மன்னார் சித்தி விநாயகர் இந்துக்கல்லூரி,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
நலிவுற்றோர் நலன் காப்பு நிதியம், மன்னார்.

நன்றி :- வீரகேசரி வாரவெளியீடு 2005ஆம் ஆண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து ஒளி வாழ்த்துகிறது

மாமன்றத்தின் முகாமைப் பேரவை உறுப்பினரும், விடுதிகள் முதியோர் இல்லக் குழுவின் செயலாளருமான திருமதி அபிராமி கயிலாசபிள்ளை அவர்களுக்கு கொழும்பு கம்பன் கழகம் இவ்வருடம் கம்பன் புகழ் விருது வழங்கி கௌரவித்திருப்பதையிட்டு "இந்து ஒளி" அவரைப் பாராட்டி வாழ்த்துகிறது.

கொழும்பு கம்பன் கழகம் வருடந்தோறும் ஏற்பாடு செய்து நடத்தும் கம்பன் விழாவின் போது, தமிழினத்தின் உயர்ச்சிக்காக தன்னலம் கருதாது சேவையாற்றி வரும் சாதனையாளர் ஒருவருக்கு கம்பன் புகழ் விருதை வழங்கி கௌரவிப்பது வழக்கம். அந்த வகையில் இவ்வருடம் திருமதி அபிராமி கயிலாசபிள்ளை பெருமையும் சிறப்பும் வாய்ந்த அந்த உயர் விருதை பெற்றுக்கொண்டுள்ளார்.

இது தொடர்பாக கொழும்பு கம்பன் கழகம் வெளியிட்டிருந்த செய்திக் குறிப்பொன்றில் "சமூக நிறுவனங்கள் பலவற்றில் இணைந்து பணியாற்றுவதோடு, பல தொண்டு நிறுவனங்களை அமைத்து ஆதரவற்ற பலரையும் காக்கின்ற அறப்பணியை தன் உயர் பணியாய் செய்து வருகின்ற பெண்மணி இவர். தியாகமனப்பான்மையோடும், கருணையோடும் இலைமறைகாயாய் நின்று தன்னலமற்று பல சமுதாயப் பணிகளை ஆற்றி வருகின்ற இவருக்கு இந்நாட்டின் தமிழ் மக்கள் சார்பாக கொழும்பு கம்பன் கழகம் சாதனையாளருக்கான உலகளாவிய விருதாகிய "கம்பன் புகழ்" விருதினை வழங்கி கௌரவித்து மகிழ்கிறது." என்று தெரிவிக்கப்பட்டிக்கிறது.

இவர் சமயத் துறையில் ஆற்றி வரும் பணியும் சிறப்பாகப் போற்றத்தக்கது. இவரது சமய, சமூக பணிகள் மேலும் சிறப்பாகத் தொடர்ந்து, உயர்வான நிலையைப் பெறவேண்டும் என "இந்து ஒளி" வாழ்த்துகிறது.

நன்றி :- இந்து ஒளி பார்த்திப வருடம் சித்திரை–ஆனி இதழ் பக்கம் 8
அகில இலங்கை இந்து மாமன்றம்
காலாண்டிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தன்னலமற்ற சமூக சேவகியை வாழ்த்துகின்றோம்

அராலியில் உயர் குடியில் பிறந்த சுப்பிரமணியம் அவர்களுக்கும் கோப்பாயைச் சேர்ந்த பர்வதவர்த்தினி அவர்களுக்கும் மகளாக திருமதி அபிராமி கயிலாசபிள்ளை அவர்கள் 1943–06–14 அன்று பிறந்தார்கள். இவர் க.பொ.த உயர்தர வகுப்புவரை யாழ். இந்து மகளிர் கல்லூரியில் கல்வி கற்றார். கல்லூரியில் கல்வி கற்ற காலத்தில் பல்துறைகளிலும் சிறந்த மாணவியாக விளங்கினார்.

எமது சகோதரப் பாடசாலையான யாழ். இந்துக் கல்லூரி வளர்த்தெடுத்த புகழ் பூத்த மைந்தரில் ஒருவரும், பட்டயக்கணக்காளருமான திரு. வி. கயிலாசபிள்ளை அவர்களைத் திருமணம் செய்து கொண்டார். இவர் கணவரின் முன்னேற்றத்திற்கு உறுதுணையாக நின்றதுடன் பல துறைகளிலும் தன்னால் ஆற்றக்கூடிய பணிகளை ஆற்றி வருகின்றார். திருக்கேதீஸ்வர திருப்பணிச் சபையின் துணைப் பொருளாளராகவும் விளங்கி அரிய சமயப்பணியையும், சமூகத் தொண்டினையும் ஆற்றி வருகின்றார்.

இலங்கையில் உடல், உளக்குறைபாட்டுச் சிறுவர்களுக்கான உதவி அமைப்பின் உபதலைவராகவும், பொருளாளராகவும் விளங்கி அதன் வளர்ச்சிக்காகப்பாடுபட்டு வருகின்றார். அவ் அமைப்பின் நிதியினை வளர்த்தெடுப்பதில் பெரும் பங்காற்றி வருகின்றார்.

வடக்கு, கிழக்கு பிராந்தியப் பாடசாலைகளின் பழைய மாணவர் சம்மேளனத்தின் பொருளாளராக இருந்து கல்வித்தொண்டு ஆற்றுகின்றார். அத்துடன் எமது கல்லூரியை வளர்த்தெடுப்பதிலும் பெரும் பங்கு வகிக்கின்றார். அகில இலங்கை இந்துமாமன்றத்தின் உபகுழுச்செயலாளராக விளங்கும் இவர் மாணவர்க்கான ஆண்கள் விடுதியையும், வயது முதிர்ந்த பெண்களுக்கான சக்தி இல்லத்தையும் இரத்மலானையில் நடாத்திப் பெரும்பணி ஆற்றி வருகின்றார். வயது முதிர்ந்த ஆண்களுக்கும் க.பொ.த உயர்தரப் பரீட்சையை முடித்துக் கொண்ட மாணவர்களுக்கும் கணணிப் பயிற்றியை தொடர்வதற்காக இரத்மலானையில் "செல்வா இல்லத்தை" தொடங்கித் திறம்பட நடாத்தி வருகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனித நேய அமைப்புடன் இணைந்து ஆதரவற்ற முதியோர்களுக்கும், சிறுவர்களுக்கும் உதவுவதில் பெரும் பணியாற்றி வருகின்றார். ஐக்கியராச்சியம், ஐக்கிய அமெரிக்கா ஆகிய நாடுகளிலும் இவ் அமைப்பினை வளர்த்தெடுப்பதில் பெரும் பணியாற்றி வருகின்றார்.

'தையலார் இம்மண்ணில் தலை நிமிர்ந்து நிற்க
தங்களின் சேவைக்கு தரணியில் ஈடுண்டோ'

எல்லாவற்றிலும் மேலாக கொழும்பு, யாழ். இந்து மகளிர் கல்லூரியின் பழைய மாணவிகள் சங்கத்தின் தலைவியாக இருந்து கல்லூரியின் வளர்ச்சிக்கு இவர் ஆற்றும் தொண்டு மகத்தானது. இவர் கணவனாரும் யாழ். இந்துக் கல்லூரி பழைய மாணவர் நம்பிக்கை நிதியத்தின் தலைவராக விளங்குகின்றார். கணணித்துறையிலும், ஆங்கிலக் கல்வியிலும் கல்லூரிகள் வளர்ச்சியடைய வேண்டும் என்பதே இத்தம்பதிகளின் பேரவாவாகும். அதற்குத் தம்மாலான உதவியை வழங்குவதில் என்றும் முன்னிற்கின்றார்கள். என்பதைப் பெருமையுடன் கூறிக்கொள்கின்றோம். அத்துடன் இருவருமே தமது கல்லூரிகளின் தேவைகளை உடனுக்குடன் பூர்த்திசெய்து வருவதை நாம் பெரும் பாக்கியமாகவே கருதுகின்றோம்.

போர்க்காலச் சூழ்நிலையில் துன்பப்பட்ட கல்லூரி மாணவிகளை உற்சாகப்படுத்தும் நோக்குடன் 1999ம் ஆண்டு மாணவிகளை கொழும்பிற்கு அழைத்து கலைநிகழ்வொன்றினை நடாத்தி அவர்களுக்கு வெளியுலகைக் காட்டுவதில் முன்னின்று உழைத்தார். சுவாமி சாந்தானந்தா அவர்களிடம் பக்தி கொண்ட இவர் சிறந்த சமயப்பற்றுள்ள இல்லத்தரசியாவார்.

அறிவு, நல்லடக்கம், நல்லொழுக்கம், தியாகசிந்தனை, கருணை, பொறுமை ஆகியவற்றை அணிகலன்களாக கொண்டு மலர்ந்த முகத்தோடு விளங்கும் தங்களுக்கு சாதனையாளருக்கான உலகளாவிய விருதாகிய "கம்பன் புகழ்" விருதினை வழங்கி கொழும்புக் கம்பன் கழகம் தனது 2005ஆம் ஆண்டுக் கம்பன் விழாவில் கௌரவித்துள்ளது. அவர்களுக்கு எமது நன்றிகள் இது எமது கல்லூரிக்கு கிடைத்த கௌரவமாகவே எண்ணி மகிழ்கின்றோம்.

'இணையிலா சமூக நல தொண்டு செய்யும் நீவீர்
இரவி போல் பல ஆண்டு இன்புற்று வாழி'

என வாழ்த்துகின்றோம்.

யாழ். இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்கம்
கொழும்பு,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
ஓம்



# இறைவழிபாடு

திருமதி சத்தியலெட்சுமி சிவலிங்கம்
இந்து மகளிர் கல்லூரி
பழைய மாணவி

நாம் ஈழநாட்டில் பிறந்த ஈழவர். எமக்கென்று சில முறையான பழக்க வழக்கங்கள் உண்டு. நாம் இறைவனால் படைக்கப்பட்ட ஆறு அறிவு உள்ள மனிதர். நாம் செய்யும் சரி, பிழைகளை எம்மைப் படைத்த இறைவனே அறிவார், ஆதலால் நாம் காலை நித்திரைவிட்டு எழும்பும் போதே, 'ஓம்' எனும் பிரணவ மந்திரத்தை உச்சரித்தபடியே துயில் எழுந்து, காலைக்கடனை முடித்து. கதிர்களை வீசிவரும் கதிரவனைக் கட்டாயம் வணங்க வேண்டும். கதிரவனின் வேறு பெயர்கள் சூரியன், ஆதவன் என்பதாம்,

நாம் ஆதவனை வணங்குவதால், உடம்பில் உள்ள நோய்கள் அகன்றுவிடும், கண் பார்வை குன்றாது. சூரியனைப் பார்த்து பத்து நிமிசம்வரை கண்களை மூடியபடி வணங்கினால் ஞாபகசக்தி, ஆரோக்கியம் விருத்தியாகும். நமது உடம்பு சுகமாய் இருக்கும், கதிரவன் வரவை, பறவைகள், மிருகங்கள் எவ்வளவோ ஆனந்தமாய் வரவேற்கின்றன. மலர்கள் மலர்ந்து மணம் வீசும். பிறந்து 2, 3 மாதமேயான சிறு குழந்தைகளும் காலை வேளையில் தான் கால், கைகளை அடித்து மிகவும் சத்தமாக சிரித்து விளையாடுவார்கள்.

எமது கண்கண்ட தெய்வம் சூரியனே! என்றும் தவறாது கதிரவனை வழிபடுங்கள். இறைவன் மீது நாம் நம்பிக்கை வைத்து தீய காரியங்களை நாம் செய்யாவிட்டால் இறைவன் என்றும் தன் கருணையால் எம்மைக் காப்பாற்றுவார். எமக்கு ஆபத்து வரும் போது, எம்மை அறியாமலே நாம் உடனே "ஐயோ" என்று கத்துவோம். அப்படிச் சொல்லாது, "கடவுளே", அல்லது "முருகா" என்று சொன்னால் ஆபத்து சுகமாய் நீங்கிவிடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டவனை வழிபட ஆலயம் செல்கிறோம். அங்கும் சில தவறான காரியங்களைச் செய்கிறோம். கழுவாத உடை அணிவது, கூந்தலை விரித்தபடி செல்வது, ஆண்கள் அணியும் உடைகளை பெண்கள் அணிவது முதலியவை தவிர்க்கப்பட வேண்டும். தமிழ் மக்களாகிய எமது உடைகள், பெண்களுக்கு பாவாடை, தாவணி, சேலை, ஆண்களுக்கு வேட்டி, சால்வை என்பன மிகவும் அழகான உடைகள்.

ஒரு பெண் பாவாடை சட்டை அணிந்து, கூந்தலைப் பின்னி, பூமாலை வைத்துப் போவதைக் கண்டால் நாம் "கலியாண வீட்டிற்கோ போகிறீர்?" என்று கேட்போம். ஆலயம் ஓர் அழகான, சுத்தமான இடம். அங்கும் அழகாய் உடை அணிந்து செல்லுங்கள். எமது உடைகளை நாம் மறக்கலாகாது.

அங்கு சத்தம் இட்டுக் கதைத்தல், கால்களை நீட்டியபடி இருப்பது. சத்தம் இட்டுச் சிரிப்பது, இவையாவும் செய்யத்தகாதவை. கொடிமரம், விக்கிரகம் இவைகளை கைகளால் தொடுவது பாவமான செயல்.

அடுத்த வீட்டு நண்பி "கோவில் போக வாறீரா?" என்றதும் நாம் எமது கணவர், பிள்ளைகள் கடமைகளைச் செய்யாது அவசரப்பட்டு ஆலயம் செல்வது மிகவும் ஆகாதசெயல். பெண்கள் தமது கடமைகளை தவறாது செவ்வனே செய்தால் அதுவே மிகவும் மேலான புண்ணியம்.

ஆலயத்தில் தேவாரம் பாட விரும்பினால் ஓர் அமைதியான இடத்தில் அமர்ந்து தேவாரம், திருவாசகம், திருப்புகழ் இவற்றை பண்ணோடு, சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்ல வேண்டும். சொற்பிழை இன்றி, கருத்து விளங்கப் பாட வேண்டும். பண்ணோடு பாடினால், யாவரும் விரும்பிக் கேட்பார்கள்.

"ஆலயம் தொழுவது சாலவும் நன்று"

"கடவுளை நம்பி கருணை பெறுவீர்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

# சிந்தனைக்கடங்காத சித்தர்

பல்லவி

சிந்தனைக்கடங்காத சித்தனே - ஓங்காரரூபா
நிந்தன் துணையின்றி வேறுண்டோ ஐயா -
(சிந்தனை)

அனுபல்லவி

கந்தனுக் கிரங்கிக் கரியாய் வந்தனையே
எந்தனுக் கென்றும் நீ அருளிய வாறென்னே -

(சிந்தனை)

சரணம்

செந்தணல் போல் செவ்வுடலுடையாய்
அந்தணனே ஆன்ம சுத்தி தருபவனே
உந்தன் சித்தி புத்தியாலே உலகமே யென்று
அந்தப் பரம் பொருளைச் சுற்றி வந்தவனே -
(சிந்தனை)

ஆக்கம்
திருமதி திலகா வி. விஜயரத்தினம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

ஓம் முருகா

# அபிஷேக அன்னதான காவற்தெய்வம் "கந்தன்"

|||

# நல்லூர் கந்தசுவாமி கோவில்

## *"அபிஷேகக் கந்தன்"*

'ஓம் முருகா' என்ற ஒலியுடன் வேல் துலங்க நல்லைக்கந்தன் ஆலயத்தினைத் தரிசிக்கின்றோம். காலம் தவறாத பூசையினாலும் காட்சிக்கினிய விழாக்களினாலும் நல்லூர்க் கந்தன் ஆலயம் சிறந்து விளங்குகின்றது.

நித்திய பூசையே பெருவிழாப் போல் விமரிசையாக நடைபெறுகின்றது.

ஆடி அமாவாசையிலிருந்து ஆறாம் நாள் கொடியேற்றத்துடன் வருடாந்த உற்சவத் திருவிழா ஆரம்பமாகி இருபத்தைந்தாம் நாள் தீர்த்தோற்சவம் நடைபெறுகின்றது. திருக்கார்த்திகை விழா, கைலாசவாகன விழா, தண்டாயுதபாணி உற்சவமான மாம்பழத் திருவிழா ஆகியன சிறப்பான விழாக்களாக விளங்குகின்றன. தேர்த்திருவிழா, தீர்த்தத் திருவிழாக்கள் இவற்றினை விஞ்சுகின்றன.

எழிலார்ந்த சித்திரத்தேரில் வள்ளி தெய்வானை சமேதராய் ஆறுமுகசாமி பெருமான் பவனிவரும் காட்சி அற்புதமானது. மாலையிற் பச்சை சாத்திச் சுவாமி தேரிலிருந்து திருக்கோவிலுக்கு திரும்பும் காட்சியோ அதைவிட அற்புதமானது.

ஒவ்வொரு மாதமும் கார்த்திகை உற்சவ நாளும், ஒவ்வொரு மாத சஷ்டிக்கும் முத்துக்குமார சுவாமிக்கு அபிஷேக நாளும், அற்புதமான அபிஷேக ஆராதனைகள் சிறந்து விளங்கும் நாட்களாகும். நல்லைக் கந்தனை "அபிஷேகக் கந்தன்" என்றும் போற்றுகின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொன்மையான இந்த ஆலயத்திருப்பணிகளைச் செய்த புவனேகபாகு பற்றிய குறிப்புக்களை இன்றும் வழங்கும் கோவிற்கட்டியத்திலிருந்தும் பிறசான்றுகளிலிருந்தும் அறிந்து கொள்கிறோம். அந்நியராட்சியில் நிலைகுலைந்த ஆலயம் இன்று மீண்டும் பொலிவோடு விளங்குகின்றது. கிழக்கு வாசலிலும் தெற்கு வாசலிலும் பெரிய கோபுரங்கள் ஆலயத்தைச் சிறப்பித்து நிற்கின்றன. மணிக்கூட்டுக் கோபுரங்கள் ஆறு அழகுறக் காட்சியளிக்கின்றன. தீர்த்தக் கேணியின் நான்கு புறமும் மண்டபம் உண்டு.

இங்கு புராண படனம் உரிய முறையில் நடைபெற்று வருகிறது. வருடந்தோறும் கோவிலில் திருப்பணி வேலைகள் இடம்பெற்று வருவதும் கோவில் பூசைகள் விழாக்கள் நேரத்திற்கு நடைபெறுவதும் குறிப்பிடத்தக்க அம்சங்கள். கோவிலைச் சூழ பல மடங்கள் உண்டு. நல்லூர்க் கந்தன் பேரில் பல புலவர்கள் பாமாலைகளும் பதிகங்களும் அந்தாதிகளும் பாடியுள்ளனர்.

♣

[ 2 ]

# செல்வச்சந்நிதி ஸ்ரீகந்தசுவாமி கோவில்

## *"அன்னதானக் கந்தன்"*

இப்பொழுது நாம் 'செல்வச்சந்நிதி' முருகன் கோவில் வரலாற்றைப் பார்ப்போம். இங்கு ஆதியில் இருந்த கோவில் கந்தபுராணக் கதையுடன் தொடர்புற்ற ஒன்று என்றும் அதனைப் பறங்கியர் அழித்தனர் என்றும் இதன் வரலாறு கூறுகின்றது. மீண்டும் புனர் அமைத்த கோவிலை இருசாரார் ஆதரித்து வந்தனரெனினும், அவர்களுள் பிணக்கு உண்டானபோது கோவிலை பூசை செய்யாது பூட்டி வைத்தனர். இச்செயலை முருகன் பொறுக்கவில்லை.

அவ்வூரில் முருகனை என்றும் வழிபடுகின்ற பக்தர் ஒருவர் இருந்தார். அவருடைய பெயர் 'மருதர் கதிர்காமர்' என்பதாகும். அவர் தம் வழக்கம் போல் ஒருநாள் தொண்டைமான் ஆற்றில் வலைவீசி மீன் பிடித்துக் கொண்டு இருக்கும் போது, ஆடு மேய்த்துக் கொண்டு நின்ற சிறுவன் ஒருவன் அவரைக் கரைக்கு வருமாறு அழைத்தான். அவர் அதனைச் சிறுவனின் விளையாட்டு என்று நினைத்து கரைக்கு வரவில்லை. எனினும் சிறுவன் மீண்டும் மீண்டும் அழைத்ததனால் அவர் கரைக்கு வந்தார். அப்பொழுது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்சிறுவன் 'நீர் இனி இந்த வேலையைச் செய்ய வேண்டாம் உமக்கு தேவையானவற்றை நான் தருவேன் உமது துன்பம் எல்லாம் நீங்கும் நீர் அறுபத்தைந்து ஆலம் இலைகளில் உணவு படைத்து வழிபட வேண்டும்' என்றான்.

இதனைக் கேட்டு கதிர்காமர் அதிசயமடைந்து 'நீர் யார்?' என்று சிறுவனைக் கேட்டார். அப்பொழுது அச்சிறுவன் தானே முருகன் என்று அவருக்கு உணர்த்தினான். அவர் தமக்கு பூசை முறைகள் மந்திரங்கள் தெரியாது என்று கூறியபொழுது அவரை கதிர்காமத்திற்கு அழைத்துச் சென்று, அங்கு நடைபெறும் பூசை முறையைக் காட்டினான். அத்துடன் அவர் வைத்துப் பூசை செய்வதற்கு வேல் ஒன்றையும் கொடுத்தான்.

இவ்வாறு கதிர்காமத்துப் பூசைமுறைகளைப் பார்த்த கதிர்காமர் மாமிச உணவைக் கைவிட்டு, சைவ ஆசாரங்களை மேற்கொண்டு, சிறுவன் கூறியவாறு, அறுபத்தைந்து ஆலம் இலைகளில் உணவு படைத்து, வாய் கட்டி பூசை செய்து வந்தார். அவர் வேண்டிய பொழுதெல்லாம் முருகன் காட்சி கொடுத்து அவருக்கு நல்வழி காட்டினான் என்பது அக்கோவிலின் வரலாற்றுக் கதையாகும்.

செல்வச்சந்நிதியில் இன்றும் கதிர்காமரின் பரம்பரையினரே சைவ ஆசாரத்தோடு பூசை செய்து வருகின்றனர். ஆலம் இலையிலே படைக்கும் வழக்கம் அந்தக் கோவிலில் மட்டுமே காணப்படுகின்றது. அத்துடன் அது இன்றும் அவ்வாறே நடைபெறுகின்றது. பூசை முடிந்தவுடன் தீர்த்தம், திருநீறு, மருந்து என மூவகைப்பட்ட பிரசாதங்கள் பூசகர்களாற் கொடுக்கப்படும். இவை மூன்றும் நோய் தீர்க்கும் அருமருந்துகள்.

அதனைப் பெறுவதற்குக் காத்திருப்பவர்களில் பலர் யார் என்பதனை அறிந்தாற் கலங்காத நெஞ்சும் கலங்கும் ஏனெனில் மருத்துவர்கள் குணப்படுத்த முடியாது என்று கூறிக்கைவிட்ட நோயாளர்களும், உளநோயால் வருந்துபவர்களும், பல துன்பங்களுக்கு ஆளாகி அலைபவர்களும் முருகனின் அருளை வேண்டி அங்கு கூடி நிற்பர். முருகன் செயலாக அவர்களுடைய இன்னல்களெல்லாம் கதிரவனைக் கண்ட பனிபோல் அகல்கின்றன. அங்கு கொடுக்கும் திருநீற்றை அவர்கள் அருமருந்தெனவே பயபக்தியுடன் பெற்றுக் கொள்கின்றனர். தீர்த்தம் அமிர்தம் போல் இருக்கும். மருந்து என்று கொடுப்பது முருகனுக்குப் படைத்த உணவில் ஒரு பிடியாகும்.

பல்வேறு நோய்களுடன் இங்கு வருபவர்கள் வைத்தியசாலையில் இருப்பது போன்று இங்கு தங்கியிருக்கின்றனர். இவர்களுக்கும் ஏனைய அடியார்களுக்கும் உணவு அன்னதான மடங்களிலே வழங்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறாக செல்வச்சன்னதி முருகனுக்கு 'அன்னதானக் கந்தன்' என்ற பெயரும் வழங்கப்படுகிறது. செல்வச்சன்னதி முருகன் செய்யும் அற்புதங்கள் சொல்லினால் வருணிக்கும் தகையனவல்ல.

♣

[ 3 ]

# கதிர்காமக் கந்தன் கோவில்

## *"காவற்தெய்வம்"*

மணிதரளம் வீசி அணி அருவி சூழ மருவு கதிர்காமப் பெருமானின் பெருங்கருணைக் கதிர்கள் எங்கும் வீசுகின்றன. தென்னிலங்கையின் நடுப்பகுதியிலே மலைகளும், காடுகளும் சூழ்ந்துள்ள இடத்தில் மாணிக்க கங்கை தழுவிச்செல்லும் வனப்புறு திருநகரில் எழுந்தருளியுள்ளார் கதிர்காமக் கந்தன். இந்தப் பெருமான் காவற்தெய்வம் என்பது ஆராய்ச்சிகளின் முடிவு.

பிள்ளையார்மலை, வீரபாகுமலை, தெய்வானைமலை, வள்ளியம்மைமலை ஆகிய மலைகளின் நடுவே சந்திரன், சூரியன், அக்கினி ஆகிய முச்சுடர்களின் சோதிபெற்று உலகுக்கெல்லாம் பேரொளியாய் விளங்குவது கதிரமலை. கதிரமலையிலே வள்ளி, தெய்வானை சமேதராய் எழுந்தருளியுள்ளார் கதிர்காமக் கந்தன் என்று தக்ஷிணகைலாய புராணம் கூறுகிறது. யாழ்ப்பாணவைபவமாலை, மகாவம்சம் ஆகிய நூல்களில் கதிர்காமம் பற்றிய குறிப்புக்கள் உண்டு.

கதிர்காமக் கந்தனின் சந்நிதி தெற்கு நோக்கியும், வள்ளியம்மையின் சந்நிதி வடக்கு நோக்கியும், தெய்வானையம்மனின் சந்நிதி கிழக்கு நோக்கியும் அமைந்திருக்கின்றது. வள்ளியம்மையாருக்கு அடிமைபூண்ட முத்துலிங்கசுவாமி சந்நிதி மாணிக்க கங்கையை கடந்து வரும் அடியார்களை அன்புடன் உபசரித்து, முருகனிடம் ஆற்றுப்படுத்தும் கருத்துடன் மேற்கு திசையை நோக்கி அமைந்திருக்கின்றது. அத்தோடு பக்தர்களால் அன்போடு வணங்கப்படும் பிள்ளையார், பெருமாள், வைரவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகியோருக்கான சந்நிதிகளும் இங்கு உண்டு.

கதிர்காம வேலவருக்கு பூசை செய்பவர் கப்புறாலை என்று அழைக்கப்படுகிறார். இவர்கள் மரபுவழியாக வாயை மஞ்சள் துணியால் கட்டிப்பூசை செய்வார்கள். வள்ளிமணாளனுக்குப் பூசைக்காலத்தில் ஆராத்திப்பெண்கள் ஆராத்தி எடுக்கும் வழக்கம் உண்டு. உலகின் பல பாகங்களிலுமிருந்து இங்கு பல யாத்திரிகர்கள் நாளாவண்ணம் வந்துகொண்டே இருக்கின்றனர். ஆட்டக்காவடி, பாற்காவடி, பறவைக்காவடி, கற்பூரக்காவடி, போன்றவற்றை இங்கு தினமும் காணக்கூடியதாக இருக்கும். பேரொளிபடைத்த கதிர்காமக் கந்தன் ஆலயத்தில் பக்தர்கள் ஏற்றும் கற்பூர ஒளியை என்றும் காணலாம். பாற்காவடி, ஆட்டக்காவடி முதலானவையும் தீக்குளிப்பும் இங்கு பக்தர்களால் நேர்த்திக்கடனாக நிறைவேற்றப்படுவனவாகும்.

இவ்வாலயத்தில் வருடாவருடம் நான்கு திருவிழாக்கள் நடைபெற்றுவருகின்றன. அவை சித்திரை வருடப்பிறப்பன்று முதல் திருவிழாவும், ஆனி அல்லது ஆடி மாதத்தில் பந்தற்கால் நடும் திருவிழாவும், மூன்றாவதாக ஆனி அல்லது ஆடி மாதத்தில் பதினைந்து நாட்களுக்கு நடைபெறும் தீர்த்தோற்சவத்தோடு கூடிய வருடாந்த திருவிழாவும், நான்காவதாக கதிர்காமக் கந்தனுக்கேயுரிய திருக்கார்த்திகை விளக்கீட்டுத் திருவிழாவும் ஆகும். இத்திருவிழாக் காலங்களில் பக்தர்கள் நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் அங்கு செல்வார்கள்.

கதிரமலையில் ஏறுமுன் முதலிற் பிள்ளையார் மலையிலுள்ள பிள்ளையாரைத்தரிசித்து அவரிடம் அருள் பெற்றுக்கொண்டு பக்தர்கள் கதிரமலைக்கு ஏறுவர். பிள்ளையார் மலையிலிருந்து கதிரமலைக்குச் செல்லும் பாதை செங்குத்தானபடியால் "முருகா, முருகா" என்று கோஷமிட்டுக் கொண்டு மலையேறுவர்.

அருணகிரிநாத சுவாமிகள், தாயுமானசுவாமிகள் ஆகியோர் கதிர்காமக் கந்தனைப் போற்றிப் பாடியுள்ளார்கள். மற்றும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர், சுத்தானந்த பாரதியார், நவாலியூர் சோமசுந்தரப்புலவர், சிவன்கருணாலய பாண்டியனார் போன்ற பலரும் கந்தப்பெருமான்பால் பாமாலை பாடியுள்ளார்கள்.

♣

வடிவமைப்பு
செல்வி. அ. அனுராதா

1988ம் ஆண்டு பா மாலை ஒப்புமையில் இருந்து எடுக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
ஓம் சக்தி

# திருப்புள்ளிருக்குவேளூர்

தல விளக்கம் – சீர்காழிக்குத் தெற்கே 6 கி.மி – சீர்காழிக்கும் மயிலாடுதுறைக்கும் இடையில் உள்ள ஊர். ஊர் நடுவே கோயில், நாற்புறமும் உயர்ந்த சுற்று மதில்கள். கிழக்கில் பைரவர், மேற்கில் வீரபத்திரர், தெற்கில் கற்பக விநாயகர், வடக்கில் காளி இருந்து கோயிற் காவல் புரிகின்றனர். மேற்குப் பார்த்த சந்நிதி.

புள் (சம்பாதி; சடாயு), இருக்கு (வேதம்), வேள் (முருகன்), ஊர் (சூரியன்) ஆகியோர் வழிபட்ட தலம். புள் + இருக்கு + வேள் + ஊர் = புள்ளிருக்குவேளூர், வைத்தீஸ்வரன் கோயில் என வழங்கப்படுகிறது.

இதன் வேறு பெயர்கள் சடாயுபுரி, வேதபுரி, கந்தபுரி, பரிதிபுரி, அங்காரகபுரம், அம்பிகாபுரம் என்பனவாகும். அம்பிகை, அங்காரக பகவான் (செவ்வாய்) இராமர், இலக்குவர் பூசித்தது. திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் பாடல் பெற்றது.

சுவாமி – வைத்தியநாதர் அம்பிகை – தையல்நாயகி
தல மரம் – வேம்பு தீர்த்தம் – சித்தாமிர்த குளம்

தலச் சிறப்பு – இது அங்காரகன் (செவ்வாய்க்கிரஹ) தலம். வைத்தியநாதர், தையல்நாயகி, முருகன் முத்துக்குமாரசாமி மூன்று மூர்த்திச் சிறப்பு. முருகப் பெருமான் வேல் வாங்கிய தலம், அர்த்தசாம பூசை முத்துக்குமாரசாமிக்கு நடந்தபிறகே சுவாமிக்குப் பூசை. கோயில் தீப அழகிற்குச் சிறந்தது. வினை தீர்த்தான் கோயில் விளக்கழகு, என்பது பழமொழி. இது ஒரு பிரார்த்தனை தலம், எண்ணியது ஈடேறும்.

இருபக்கமும் தேங்காய் பழக்கடைகள். தேங்காய் பழத்தட்டுடன் உப்பு, வெல்லம், மிளகு, கடுகுப்பொருட்கள் விற்கின்றனர். உடம்பிலுள்ள கட்டி கரைய வெல்லம், உப்பு குளத்திலும், பருக்கள், மருக்கள் உதிர கடுகு, மிளகு சந்நிதியில் உள்ள தொட்டியிலும், வேண்டுதலுக்காகப் போடுவார்கள். முன்னதாக எழுநிலைமாட ராஜகோபுரம் வானுயர்ந்து தோன்றுகிறது. திருமாடப் பத்திமகா மண்டபமும், சபா மண்டபத்தில் யானைத் தோற்றமும் கண்டு, வெளிப்பிரகாரம் வழியாகச் செல்லலாம். விநாயகர், ஆறுமுகக் கடவுள் சந்நிதி உண்டு.

கார்த்திகைதோறும் அபிஷேக மண்டபத்தில் செல்வமுத்துக்குமாரசாமிக்கு சந்தனக் குழம்பு அபிஷேகம் நடைபெறுவது கண்கொள்ளாக் காட்சியாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிழக்கு கோபுர வழியே வெளிவந்து, உள்ளே நுழைய, எதிரில் மூலவர் அங்காரகர் சந்நிதி உள்ளது. தென்பிரகாரம் நடுவே தையல்நாயகி சந்நிதி. எதிரில் மிகப்பெரிய சித்தாமிர்தத் தீர்த்தம். அம்மன் சந்நிதி பக்கமாக மூலவர் வைத்தியநாதர் உள்ளார்.

உட்பிரகார இடப்புறம், இத் தலத்தின் சிறப்பு மூர்த்தமாகிய செல்வமுத்துக்குமாரசாமி உற்சவர் சந்நிதி. நவரத்தின அங்கி சார்த்திக் கொண்டால் எழில்மிகு காட்சி. அடுத்தாற்போல் கஜலட்சுமி, நடராஜர் சபையில் திருமுறைப் பேழையுடன் சிவகாமியுடன் மாணிக்கவாசகரும், காரைக்கால் அம்மையாரும் காட்சி தருகின்றனர். அடுத்து, நால்வேதம், அமராவதி, கைலாசநாதர், மீனாட்சி சுந்தரேசுவரர், விசுவநாதர் என்ற பெயர்களில் சிவலிங்க மூர்த்தங்கள், சங்கரலிங்கம் உள்ளன. துர்க்கை சந்நிதி. தீர்த்தக் கிணறு, திருமாடப்பத்தியில் நவக்கிரஹங்கள் வரிசையாக உள்ளன.

பின் பைரவரையடுத்து இராமர், சடாயு, முருகன், சூரியன், அங்காரகன் இவர்கள் வழிபட்ட சிவலிங்கங்கள் உள்ளன. 18 சித்தர்களில் 'தன்வந்திரி' இத் தலத்திற்குரியவர். இராமர் சடாயுவுக்கு இறுதிக் காரியம் செய்த சாம்பல் குண்டம் உள்ளது. எதிரில் விமான மேல்தளத்தில் சட்டநாதர் எழுந்தருளியுள்ளார். அறுபத்துமூவர் உற்சவ மூர்த்திகளுக்கு அடுத்து சடாயுவும், அங்காரக உற்சவ மூர்த்தமும் தனியே அமைந்துள்ளது. செவ்வாய்க்கிரஹ தோஷமுடையோர் நிவர்த்திக்கு இங்கு அருச்சனை செய்கின்றனர். வாரம் ஒருமுறை செவ்வாய்க்கிழமை மாலையில் ஆட்டு வாகனத்தில் அங்காரகன் கோவிலில் ஊர்வலம் வருகிறார்.

அடுத்து (வலஞ்சுழி விநாயகர்) சோமாஸ்சுந்தரர் சந்நிதிகள், அம்பாள் சந்நிதி வருகிறது. அன்னை அருட்காட்சியும், கருணை முகத்தழகும் கொண்டு மாந்தர் தம் நோய் நொடிகளைப் போக்க தையல்நாயகியாக விளங்குகிறார். தைலபாத்திரமும், சஞ்சீவியும், வில்வமரத்தடி மண்ணும், விபூதி மருந்துப் பொட்டலம் விற்பனை செய்கிறார்கள். இதனைக் கொண்டு வந்து வீட்டில் வைத்துக் கொள்ள எந்த வியாதியும் அகல்கிறது. வருடத்தில் ஒரு முறையாவது இக்கோயில் வந்து சித்தாமிர்தத் தீர்த்தில் தீர்த்தமாடி பெருமானை வழிபட்டால் நோயின்றி வாழ்வோம்.

## செவ்வாய் கடவுள் போற்றி

வசனநல் தைரியந்தான் மன்னவன் சபையில் வார்த்தை
புசபல பராக்கிரமங்கள் போந்தனில் வெற்றி ஆண்மை
நிசமுடன் அவரவர்க்கு நீள்நிலம் தன்னில் நல்கும்
குசன்நில மகனாம் செவ்வாய் குரை கழல் போற்றி! போற்றி!

செவ்வாய் கிரஹ வரலாறு – மகேசுவரன் உமையம்மையைப் பிரிந்திருந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்தே உமாதேவியின் நெற்றியிலிருந்து வந்த வியர்வைத் துளி பூமியில் விழ அதில் தோன்றியவர் அங்காரகர் என்றும், பரத்வாஜ முனிவரின் மகனாகப் பிறந்து பூமாதேவியால் வளர்க்கப்பட்டவர் என்றும் கூறுவார்கள். ஒரு சமயம் மகேசுவரனின் சினங்கொண்ட நெற்றிக் கண்ணில் தோன்றிய வீரபத்திரர் தட்சனது யாகத்தை அழித்த உக்ரத்தைப் பார்த்த தேவர்கள் நடுங்க, வீரபத்திரர் இரக்கப்பட்டு உருவத்தை மாற்றி அங்காரகனானார் என்று மச்ச புராணம் விளம்பும்.

அன்ன வாகனத்தில் அமர்ந்தவர். செந்திற உருவினர். முக்கோண வடிவ இருக்கையும், ஆட்டுக் கொடியும் உடையவர். எட்டுக் குதிரைகள் பூட்டிய பொற்றேரில் அமர்ந்தவரும், தவ வலியால் உயர் பதவி அடைந்தவரும் ஆவார். யோக நெருப்புடை உடலும், அருங்கலை வல்லவரும் ஆவார். நவக்கிரஹ மண்டலத்தில் சூரியனுக்குத் தெற்கில் மூன்றாவதாக விளங்குபவர். புன்னகை பூத்த முகம், நான்கு கரத்தில் கதை, சக்தி ஆயுதம், சூலம் ஏந்தி வரத கரத்துடன் விளங்குபவர். செவ்வாயும் முருகனும் ஒன்றெனக் கூறப்படும். இவரது வேறு பெயர்கள் அங்காரகன், குஜன், பௌமன், பூமிபுத்திரன்.

## தேவாரம்

### திருச்சிற்றம்பலம்

திருஞானசம்பந்தர் தேவாரம் 2ம் திருமுறை

பண் - சீகா மரம் ராகம் -ஆரபி தாளம் -ஆதி

கள்ளார்ந்த பூங்கொன்றை மதமத்தம் கதிர்மதியும்
உள்ளார்ந்த சடைமுடியெம் பெருமானார் உறையும் இடம்
தள்ளாய சம்பாதி சடாயென்பார் தாமிருவர்
புள்ளானார்க்கு அரையன்இடம் புள்ளிருக்கு வேளூரே.

தையலார் ஒருபாகம் சடைமேலாள் அவளோடும்
ஐயந்தேர்ந்து உழல்வாரோர் அந்தணனார் உறையும் இடம்
மெய்சொல்லா இராவணனை மேலோடி ஈடழித்துப்
பொய்சொல்லாது உயிர்போனான் புள்ளிருக்கு வேளூரே.

வாசநலம் செய்திமையோர் நாடோறு மலர்தூவ
ஈசன்எம் பெருமானார் இனிதாக உறையும் இடம்
யோசனைபோய்ப் பூக் கொணர்ந்துஅங்கு ஒருநாளும் ஒழியாமே
பூசனைசெய்து இனிதிருந்தான் புள்ளிருக்கு வேளூரே.

மாகாயம் பெரியதொரு மானுரிதோல் உடையாடை
ஏகாய மிட்டுகந்த எரியாடி உறையுமிடம்
ஆகாயம் தேரோடும் இராவணனை அமரின் கண்
போகாமே பொருதழித்தான் புள்ளிருக்கு வேளூரே.

கீதத்தைமிகப்பாடும் அடியார்கள் குடியாகப்
பாதத்தைத் தொழநின்ற பரஞ்சோதி பயிலுமிடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதத்தின் மந்திரத்தால் வெண் மணலே சிவமாகப்
போதத்தால் வழிபட்டான் புள்ளிருக்கு வேளூரே.

திறங்கொண்ட அடியார்மேல் தீவினை நோய் வாராமே
அறங் கொண்டு சிவதன்மம் உரைத்தபிரான் அமருமிடம்
மறங்கொண்டங்கு இராவணன்றன் வலிகருதி வந்தானைப்
புறங்கண்ட சடாயுஎன்பான் புள்ளிருக்கு வேளூரே.

அத்தியினீர் உரிமூடி அழகாக அனலேந்திப்
பித்தரைப் போல் பலிதிரியும் பெருமானார் பேணுமிடம்
பத்தியினால் வழிபட்டுப் பலகாலந் தவம்செய்து
புத்தியொன்ற வைத்துகந்தான் புள்ளிருக்கு வேளூரே.

பண்ணொன்ற இசைபாடும் அடியார்கள் குடியாக
மண்ணின்றி விண்கொடுக்கு மணிகண்டன் மருவுமிடம்
எண்ணின்றி முக்கோடி வாணாளது உடையானைப்
புண்ணொன்றப் பொருதழித்தான் புள்ளிருக்கு வேளூரே.

வேதித்தார் புரமூன்றும் வெங்கணையால் வெந்தவியச்
சாதித்த வில்லாளி கண்ணாளன் சாருமிடம்
ஆதித்தன் மகன்என்ன அகல்ஞாலத் தவரோடும்
போதித்த சடாயுஎன்பான் புள்ளிருக்கு வேளூரே.

கடுத்துவரும் கங்கைதனைக் கமழ்சடையொன் றாடாமே
தடுத்தவர் எம் பெருமானார் தாம்இனிதாய் உறையுமிடம்
விடைத்துவரும் இலங்கைக்கோன் மலங்கச் சென்று இராமற்காப்
புடைத்தவனைப் பொருதழித்தான் புள்ளிருக்கு வேளூரே.

செடியாய உடல் தீர்ப்பான் தீவினைக்கோர் மருந்தாவான்
பொடியாடிக்கு அடிமை செய்த புள்ளிருக்கு வேளூரைக்
கடியார்ந்த பொழிற்காழிக் கவுணியன்சம் பந்தன்சொல்
மடியாது சொல்லவல்லார்க்கு இல்லையாம் மறுபிறப்பே.

திருச்சிற்றம்பலம்

திருநாவுக்கரசர் தேவாரம் – திருக்குறுந்தொகை 5ம் திருமுறை

வெள்ளெ ருக்கர வம்விர வும்சடைப்
புள்ளி ருக்குவே ளூரான் பொற்கழல்
உள்ளி ருக்கும் உணர்ச்சியில் லாதவர்
நள்ளி ருப்பர் நரகக் குழியிலே.

மாற்றம் ஒன்றறி யீர்மனை வாழ்க்கைபோய்க்
கூற்றம் வந்துமைக் கொள்வதன் முன்னமே
போற்ற வல்லிரேற் புள்ளிருக்கு வேளூர்
சீற்ற மாயின தேய்ந்தறும் காண்மினே.

அருமறையனை ஆணொடு பெண்ணனைக்
கருவி டம்மிக உண்ட வெங் கண்டனைப்
புரிவெண் நூலனைப் புள்ளிருக்கு வேளூர்
உருகி நைபவர் உள்ளங் குளிருமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னு ருவை ஒருவர்க்கு அறிவொணா
மின்னு ருவனை மேனிவெண் நீற்றனைப்
பொன்னு ருவனைப் புள்ளிருக்கு வேளூர்
என்ன வல்ல வர்க்கில்லை இடர்களே.

செங்கண் மால்பிர மற்கும் அறிவொணா
அங்கி மின்னுரு வாகி அழல்வதோர்
பொங்கு அரவனைப் புள்ளிருக்கு வேளூர்
மங்கை பாகனை வாழ்த்த வரும்இன்பே.

குற்றம் இல்லியைக் கோலச் சிலையினால்
செற்ற வர்புரம் செந்தழல் ஆக்கியைப்
புற்ற ரவனைப் புள்ளிருக்கு வேளூர்
பற்ற வல்லவர் பாவம் பறையுமே.

கையி னோடுகால் கட்டி யுமரெலாம்
ஐயன் வீடினன் என்பதன் முன்னனம்நீர்
பொய்யி லாஅரன் புள்ளிருக்கு வேளூர்
மையு லாவிய கண்டனை வாழ்த்துமே.

உள்ளம் உள்கி உகந்து சிவன்என்று
மெள்ள உள்க வினைகெடு மெய்ம்மையே
புள்ளி னார்பணி புள்ளிருக்கு வேளூர்
வள்ளல் பாதம் வணங்கித் தொழுமினே.

அரக்க னார்தலை பத்தும் அழிதர
நெருக்கி மாமலர்ப் பாதம் நிறுவிய
பொருப்ப னார்உறை புள்ளிருக்கு வேளூர்
விருப்பி னால்தொழு வார்வினை வீடுமே.

திருச்சிற்றம்பலம்

திருநாவுக்கரசர் தேவாரம் – திருத்தாண்டகம் 6ம் திருமுறை

ஆண்டானை அடியேனை ஆளாக் கொண்டு
அடியோடு முடியயன்மா லறியா வண்ணம்
நீண்டானை நெடுங்களமா நகரான் தன்னை
நேமிவான் படையால்நீ ளுரவோன் ஆகங்
கீண்டானைக் கேதாரம் மேவி னானைக்
கேடிலியைக் கிளர்பொறிவா ளரவோ டென்பு
பூண்டானைப் புள்ளிருக்கு வேளூ ரானைப்
போற்றாதே ஆற்றநாள் போக்கி னேனே.

சீர்த்தானைச் சிறந்தடியேன் சிந்தை யுள்ளே
திகழ்ந்தானைச் சிவன்தன்னைத் தேவதேவைக்
கூர்த்தானைக்கொடுநெடுவேற் கூற்றந் தன்னைக்
குரைகழலாற் குமைத்துமுனி கொண்ட அச்சம்
பேர்த்தானைப் பிறப்பிலியை இறப்பொன் றில்லாப்
பெம்மானைக் கைம்மாவி னுரிவை பேணிப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போர்த்தானைப் புள்ளிருக்கு வேளூ ரானைப்
போற்றாதே ஆற்றநாள் போக்கி னேனே.

பத்திமையாற் பணிந்தடியேன் றன்னைப் பன்னாள்
பாமாலை பாடப் பயில்வித் தானை
எத்தேவும் ஏத்தும் இறைவன் தன்னை
எம்மானை என்னுள்ளத் துள்ளே யூறும்
அத்தேனை அமுதத்தை ஆவின் பாலை
அண்ணிக்குந் தீங்கரும்பை அரனை ஆதிப்
புத்தேளைப் புள்ளிருக்கு வேளூ ரானைப்
போற்றாதே ஆற்றநாள் போக்கி னேனே.

இருளாய வுள்ளத்தி னிருளை நீக்கி
யிடர்பாவங் கெடுத்தேழை யேனை யுய்யத்
தெருளாத சிந்தைதனைத் தெருட்டித் தன்போற்
சிவலோக நெறியறியச் சிந்தை தந்த
அருளானை ஆதிமா தவத்து ளானை
ஆறங்க நால்வேதத் தப்பால் நின்ற
பொருளானைப் புள்ளிருக்கு வேளூ ரானைப்
போற்றாதே ஆற்றநாள் போக்கி னேனே.

மின்னுருவை விண்ணகத்தில் ஒன்றாய் மிக்கு
வீசுங்கால் தன்னகத்தில் இரண்டாய்ச் செந்தீத்
தன்னுருவின் மூன்றாய்த்தாழ் புனலின் நான்காய்த்
தரணிதலத் தஞ்சாகி யெஞ்சாத் தஞ்ச
மன்னுருவை வான்பவளக் கொழுந்தை முத்தை
வளரொளியை வயிரத்தை மாசொன் றில்லாப்
பொன்னுருவைப் புள்ளிருக்கு வேளூ ரானைப்
போற்றாதே ஆற்றநாள் போக்கி னேனே.

அறையார்பொற் கழலார்ப்ப அணியார் தில்லை
அம்பலத்துள் நடமாடும் அழகன் தன்னைக்
கறையார்மூ விலைநெடுவேற் கடவுள் தன்னைக்
கடல்நாகைக் காரோணங் கருதி னானை
இறையானை என்னுள்ளத் துள்ளே விள்ளா
திருந்தானை ஏழ்பொழிலுந் தாங்கி நின்ற
பொறையானைப் புள்ளிருக்கு வேளூ ரானைப்
போற்றாதே ஆற்றநாள் போக்கி னேனே.

நெருப்பனைய திருமேனி வெண்ணீற் றானை
நீங்காதென் னுள்ளத்தி னுள்ளே நின்ற
விருப்பவனை வேதியனை வேத வித்தை
வெண்காடும் வியன்துருத்தி நகரும் மேவி
இருப்பவனை யிடைமருதோ டீங்கோய் நீங்கா
திறையவனை யெனையாளுங் கயிலை யென்னும்
பொருப்பவனைப் புள்ளிருக்கு வேளூ ரானைப்
போற்றாதே ஆற்றநாள் போக்கி னேனே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேரா யிரம்பரவி வானோ ரேத்தும்
பெம்மானைப் பிரிவிலா அடியார்க் கென்றும்
வாராத செல்வம் வருவிப் பானை
மந்திரமும் தந்திரமும் மருந்து மாகித்
தீராநோய் தீர்த்தருள வல்லான் தன்னைத்
திரிபுரங்கள் தீயெழத்திண் சிலைகைக் கொண்ட
போரானைப் புள்ளிருக்கு வேளூ ரானைப்
போற்றாதே ஆற்றநாள் போக்கி னேனே.

பண்ணியனைப் பைங்கொடியாள் பாகன் தன்னைப்
படர்சடைமேற் புனல்கரந்த படிறன் தன்னை
நண்ணியனை யென்னாக்கித் தன்னா னானை
நான்மறையின் நற்பொருளை நளிர்வெண் டிங்கட்
கண்ணியனைக் கடியநடை விடையொன் றேறுங்
காரணனை நாரணனைக் கமலத் தோங்கும்
புண்ணியனைப் புள்ளிருக்கு வேளூ ரானைப்
போற்றாதே ஆற்றநாள் போக்கி னேனே.

இறுத்தானை இலங்கையர்கோன் சிரங்கள் பத்தும்
எழுநரம்பின் இன்னிசைகேட் டின்புற் றானை
அறுத்தானை அடியார்தம் அருநோய் பாவம்
அலைகடலில் ஆலால முண்டு கண்டங்
கறுத்தானைக் கண்ணழலாற் காமன் ஆகங்
காய்ந்தானைக் கனன்மழுவுங் கலையு மங்கை
பொறுத்தானைப் புள்ளிருக்கு வேளூ ரானைப்
போற்றாதே ஆற்றநாள் போக்கி னேனே.

திருச்சிற்றம்பலம்

## நவக்கிரஹப் போற்றி: – செவ்வாய்

சிறப்புறு மணியே செவ்வாய்த் தேவே
குறைவிலா தருள்வாய் குணமுடன் வாழ
மங்களச் செவ்வாய் மலரடி போற்றி
அங்காரகனே அவதிகள் நீக்கு

தொகுப்பு
திருமதி விமலா மணிவாசகன்.

நன்றி – 'நவக்ரஹ கோயில்கள்' ஜெயம் பதிப்பகம், 'பன்னிரு திருமுறைத் தொகுதி' வர்த்தமானன் பதிப்பகம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் சக்தி

சக்தி ஓம்

# கன்னியா குமரி அம்மன் கோவிலும் அதன் ஸ்தல புராணமும் :-

தேவி பார்வதி கன்னிப்பருவத்தில் தவம் புரிந்ததை குறிக்கும் வகையில் கன்னியாகுமரியில் தேவி கோயில் கொண்டு எழுந்தருளியதாக ஐதிகம். ஒரு சமயம் பாணாசுரன் என்ற அரக்கன் மூன்று லோகங்களையும் தன் ஆதிக்கத்தில் கொண்டு வந்த பின்பு தேவலோகத்தையும் ஆக்கிரமிக்க தொடங்கினான். தேவர்கள் பயந்து பரமசிவனிடம் தங்களைக் காக்குமாறு வேண்டினர். சிவனும் அதற்கு இணங்கி அவர்களுக்கு ஆறுதல் கூறி, தன் மனைவி பார்வதிதேவி 'கன்னியாகுமாரியாக' தோன்றி அசுரனை அழிப்பாள் என்று அபயம் அளித்தார். தேவி கன்னியாக ஜன்மமெடுத்து வளர்ந்து வருகையில், கன்னியின் அழகைக் கண்டு மோகித்து அசுரன் கெட்ட எண்ணங்கொண்டு அவளை நெருங்கவே கன்னியாகுமரி அவனுடன் கடும்போரிட்டு அசுரனை அழித்தாள். இப்பொழுதும் நவாராத்திரி காலத்தில் இக்கதை "பள்ளிவேட்டை" என்னும் பெயரில் நாட்டுக்கூத்தாக நடைபெற்று வருகின்றது.

அசுரனை அழித்த பின்பு கன்னியாகுமரி சுசீந்திரத்தில் கோவில் கொண்டுள்ள மூன்று மூர்த்திகளில் ஒருவரான சிவனை கைத்தலம் பற்ற விரும்பினாள். சிவபெருமானும் கன்னியாகுமரியின் விருப்பத்துக்கு இணங்கினார். ஆனால் நாரத முனிவரின் சூழ்ச்சியால் குறித்த நேரத்தில் சிவபெருமான் மணவீட்டிற்கு வர முடியாதலால் திருமணம் நின்று போய்விட்டது. இதனால் கோபமடைந்த கன்னியாகுமரி கடும் சினத்துடன் மண மங்கலப் பொருட்கள் யாவற்றையும் தூக்கி எறிந்துவிட்டாள். இப்பொருட்களே குமரிக்கடற்கரையில் வண்ண வண்ண மணிகளாகவும், கற்களாகவும் இறைந்து கிடக்கின்றன என்று மக்கள் நம்புகின்றனர்.

இந்த வரலாற்றின்படி தேவி பகவதி அம்மன் கோவில் கடல் பாறையின் மேலே இருந்ததாகவும் கடல் அரிப்பினால் கோவில் அழிந்ததாகவும் இப்பொழுது கடற்கரையில் நிறுவப்பட்டதாகவும் சொல்லப்படுகிறது. கோவில் சன்னதி கடலை நோக்கி கிழக்குமுகமாக அமைந்துள்ள போதிலும், அதன் பிரதான வாயில்கள் ஆண்டில் ஐந்து முறை மட்டுமே திறக்கப்படும். தேவியின் முகத்தில் ஜொலிக்கும் மூக்குத்தியின் கற்களின் பிரகாசத்தைக் கண்டு திசை தடுமாறி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அநேக கப்பல்கள் கரை தட்டி பாறைகளின் மேல் மோதின என்றும் அதனால் கோவிலின் கீழ்வாயில்கள் நிரந்தரமாகவே மூடி வைக்க வேண்டி வந்தன என்றும் சொல்லப்படுகிறது.

வங்காள விரிகுடா, அரபிக்கடல் மற்றும் இந்துமகா சமுத்திரம் மூன்றும் கூடும் அரிய காட்சியை நினைவாலயத்தின் தெற்குப் பகுதியிலிருந்து காணலாம். சீதாதேவியை தேடி ஸ்ரீராமபிரான் கன்னியாகுமரி கடற்கரைக்கு வந்ததாகவும் தேவி கன்னியாகுமரியே ஸ்ரீராமபிரானை இராமேஸ்வரம் நோக்கிச் செல்ல வழி காட்டினாள் என்றும் சொல்லப்படுகிறது. இந்த கர்ணபரம்பரை ஐதீகங்களைக் கருதியே மக்கள் பக்தி உள்ளத்துடன் கன்னியா குமரியில் நீராடி, அங்கு காலையிலும், மாலையிலும், சூரியன் கடலிலே கிழக்கில் உதித்து, மேற்கில் அஸ்தமிப்பதை கண்டு களிக்கின்றார்கள். நாங்களும் கண்டு களித்தோம்.

திருமதி. ஞானேஸ்வரி ஞானசேகரம்
யாழ். இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவி

112 3/1 காலி வீதி
கொழும்பு – 4
15 – 4 – 2005

செயலாளர்,
யாழ். இந்து மகளிர் கல்லூரி
பழைய மாணவிகள் சங்கம்.
கொழும்பு

அன்புடையீர்,

எனது 40 வருடகால ஒலிபரப்பு சேவைத் திறனைப் பாராட்டி பிரம்மாண்டமான அளவில் இராப்போசன விருந்தளித்து சங்கம், என்னை கௌரவித்தமை எனது வாழ்நாளில் மறக்க முடியாத, மகிழ்ச்சி தரும் வைபவம். தலைவி திருமதி. அபிராமி கயிலாசபிள்ளை தலைமையில் உறுப்பினர்கள் ஒன்று திரண்டு பலரும் வியந்து போற்றும் விதத்தில் இந் நிகழ்வை நடத்தியதுடன், பத்திரிகைகளில் படங்களை பிரசுரிக்க வைத்து எனக்கு பெருமை தேடித் தந்துள்ளனர். எனது கல்லூரியால் நான் உயர்ந்தேன். அக்கல்லூரிக்கு பெருமை சேர்க்கும் விதத்தில் என் ஆற்றலைப் பயன்படுத்த ஆண்டவன் அருள் புரிந்தான். நீங்களோ எனக்கு பட்டமும் சூட்டி புகழின் உச்சியில் ஏற்றிவிட்டீர்கள். – 'நன்றி' கூறுவதற்கு எனக்கு வார்த்தைகள் இல்லை

அன்புடன்
சற்சொரூபவதி நாதன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# யௌவன பருவத்தில் தூய்மையைப் பாதுகாத்துக் கொள்வோம்.

எம்மை எதிர்நோக்கி வரும் அறைகூவல்களுக்குத்
தயங்காது முகம்கொடுத்து வாழ்க்கையை வெற்றி கொள்வோம்.

2005 ஆம் ஆண்டு.

இன்றைய தினம் பெறுமதிவாய்ந்த பல உயிர்கள் உட்பட பெருமளவு பொருட்கள் உங்களுக்கும் நாட்டுக்கும் உரிமையற்றவைகளாக மறைந்துள்ளன எனினும் எஞ்சியுள்ள யௌவனங்களின் வாழ்க்கை நாட்டுக்குப் பெரிதும் அத்தியாவசியமானதாகும்.

உங்களுக்கும் உங்கள் எதிர்காலத்திற்கும் நாட்டின் சார்பாகவும் புரியப்பட வேண்டியவைகள் அனேகம்.

உங்கள் மானசீக சுகாதாரத்தைப் பேணிக்கொள்வதன் பொருட்டு உங்கள் வாழ்க்கையைக் கட்டி எழுப்புவதற்கு உங்களுக்கு உதவிபுரிவதற்கு அனேக மக்கள் எதிர்பார்த்துக் கொண்டிருப்பதனால் வாழ்க்கைக் குறிக்கோளுடன் எதிர்காலத்திற்கான திட்டமொன்றை தயாரித்துக் கொண்டு செயலாற்ற ஆரம்பிக்கவும். (இதன் பொருட்டு இன்றைய தினத்தில், நாளைய தினத்தில், அடுத்த வாரத்தில், மாதத்தில், வருடத்தில் புரியப்படும் வேலைகளைப் படிப்படியாகத் திட்டமிட்டுக் கொள்ளுங்கள்.)

உங்கள் சுற்றாடலில் இருப்பவர்களுக்கு உங்கள் உதவி தேவைப்படுமாயின் கூடிய அளவில் உதவிகளைப் புரியவும்.

இதன் பொருட்டு யௌவனக் குழுக்களை அமைத்துக் கொண்டு

* சுற்றாடலைத் தூய்மையாக்குதல்
* உணவுகளைத் தயாரித்தல்
* கர்ப்பவதிகள், சிறு குழந்தைகள், வயோதிபர்கள் மற்றும் நோயாளர்கள் ஆகியோர்களுக்கு உங்களால் புரியக் கூடிய உதவிகளைப் புரியுங்கள். வீணாகக் காலத்தைப் போக்காது குழுக்களாகக் கூடி விளையாட்டுக்களில் ஈடுபடவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* கூடிய அளவு சமயக் கிரிகைகளில் ஈடுபடுங்கள்.

இதன் மூலம் உங்கள் மானசீக சுகாதாரத்தை நல்ல நிலைமையில் வைத்துக்கொள்ளலாம்.

உங்கள் பராமரிப்பு................

வாழ்க்கையை மீண்டும் கட்டி எழுப்ப வேண்டிய யௌவனங்களாகிய உங்களுக்கு முதியோர்களைப் போன்று அனுபவம் இல்லாதபடியினால் அபச்சாரங்களுக்கும் தொல்லைகளுக்கும் உட்படும் அவதான நிலை அதிகமானதாகும்.

ஆனபடியால் உங்கள் பராமரிப்பின் பொருட்டு............

கூடிய அளவு உங்கள் குடும்பத்தினருடன் அல்லது நம்பிக்கையாளர்களுடன் கூடி இருப்பதற்கு முயற்சிக்கவும்.

அறிமுகமற்றவர்களுடன் பழகும்பொழுது கவனமாக இருங்கள்.

தனிமையில் இருக்கும் சந்தர்ப்பங்களைக் தவிர்த்துக்கொள்ளுங்கள்.

உங்களை சீர்கேடான நடவடிக்கைகளில் ஈடுபடுத்துவதற்கு முயற்சிக்கின்றார்கள் என்று அறிந்தவுடன் உபாயமான முறையில் அவ்விடத்திலிருந்து விலகிச் சென்று நம்பிக்கையான வயதுவந்தோர் ஒருவருக்கு அதைக் கூறவும்.

சம வயதுள்ளவர்களினால் கோரப்படும் தகுதியற்ற அழுத்தங்களுக்குள் அகப்படாது இருப்பதற்கு

போதைப் பொருட்கள், மதுபானம் புகைப்பிடித்தல் என்பனவற்றைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.

அவ்வாறான பொருட்களில் உங்களுடைய விருப்பமின்மையை அவர்களுக்குப் பயமின்றி வெளிப்படுத்துற்கள்.

உங்களுக்குக் கிடைத்துள்ள சுதந்திரத்தை நல்ல வகையில் பயன்படுத்துங்கள்.

உணவுகள் பானங்கள் என்பனபற்றி கவனம் செலுத்துங்கள்.

முக்கியமான 3 வேளை உணவுகளையும் கூடியவகையில் பெற்றுக் கொள்ளுங்கள். (பட்டினியாக இருப்பதினால் உங்கள் உடம்பைப் போன்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானசீக பலவீனமும் ஏற்படலாம்.)
எப்பொழுதும் துப்பரவான தண்ணீரைப் பாவியுங்கள்.

உங்கள் தனிப்பட்ட சுகாதாரத்தைப் பேணிக்கொள்வதற்கு..................

உடம்பு தூய்மையின்மையின்மை காரணமாக சர்ம நோய்கள் (கவடுகள் சொறிதல், குட்டநோய் போன்றன) ஏற்படக் கூடும்.

ஆனபடியால்

இருக்கும் வசதிகளின்படி உங்கள் உடம்பைத் தூய்மையாக வைத்துக் கொள்வதற்கும் துப்பரவான உடைகளை (விசேடமாக உள் உடுப்புகள்) அணிந்து கொள்வதற்கும் முயற்சிக்கவும்.

நீங்கள் பெண்பிள்ளையாயின் மாதவிடாய் நாட்களில் குளித்தல், முழுகுதல் என்பனவற்றின் மூலம் உடம்பையும் பாலியற் பிரதேசங்களையும் தூய்மையாக வைத்துக் கொள்ளுங்கள்.

"முறிந்து விழுந்த தேசத்தைக் கட்டி எழுப்புவதற்கு யௌவனவர்களாகிய உங்களுக்கு இயலுமை உண்டு"

உங்களுக்கு ஏதேனும் சுகாதார பிரச்சினைகள் இருப்பின் பிரதேசத்தில்

சுகாதார வைத்திய உத்தியோகத்தர்

பொதுசன சுகாதார தாதி சகோதரி

பொதுசன சுகாதார பரிசோதகர்

குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தர்

என்பவர்களைச் சந்திக்கவும்.

நன்றி:- யுனிசெப், குடும்ப சுகாதார பணியகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Quotations, Sayings and aphorisms on Teachers & teaching (Courtesy Ceylon Tamil Teachers' Association)

1. One good teacher in a life time may some times change a delinquent into a solid citizen.—*Philip Wylie*
2. Teachers can change lives with just the right mix of chalk and challenges—*Joyce and Myers*
3. We worry about what a child will be tomorrow, yet we forget that he is someone today—*Stacia Tauscher*
4. The secret of teaching is to appear to have known all your life what you just learned this morning—*Anon*
5. He who dares to teach must never cease to learn—*John Cotton Dana*
6. Men learn while they teach—*Seneca*
7. Any man who has been a teacher keeps in himself the attitude of a student—*Alfred de Vigny*
8. A teacher is one who makes himself progressively unnecessary—*Thomas Carru Thers*
9. The teacher is one who makes two ideas grow where only one grew before—*Elbert Hubbard*
10. You cannot teach a man anything; You can only help him to find it for himself—*Galilio Calilis*
11. Poor is the pupil who does not surpass his master—*Leonardo Da Vince*
12. A teacher has two jobs; fill young minds with knowledge, yes, but more important—give those minds a compass so that knowledge doesn't go waste—*Mr. Holland's Opus*
13. To waken interest and kindle enthusiasm is the sure way to teach easily and successfully—*Tryon Edwards*
14. Education is not filling a bucket, but lighting a fire—*William Yeats*
15. The purpose of education is to replace an empty mind with an open one—*Malcolm Forbes*

**(Compiled by Thilaka V. Wijeyaratnam)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# தாய்க்கு முதல் வணக்கம்

பெண்கள் புத்திசாலிகள் :- பெண்மணிகளுக்கு 'அர்த்தாங்கி' என்ற பெயரும் இருக்கிறது. மனிதனுடைய இதயத்துக்குச் சமமானவள் பெண் அவனிலும் சரிபாதி அவள். வீட்டுக்குப் புகழ் சேர்ப்பவள் அவளாதலால் 'கிருகலட்சுமி' என்ற பெயரும் கூட அவளுக்குப் பொருந்தும்.

தாய்க்கே முதல் வணக்கம் :- இறைவன் மேல் முதலில் பக்தி செலுத்தும் பெண்கள் மெதுவாகத் தம் கணவர்களையும் பக்தி மார்க்கத்தில் அழைத்துச் செல்கின்றனர். அறிவு ஆண் மகன் என்றால் பக்தி என்பது பெண்கள் என்று பொருள் கொள்ளலாம் பக்தியின்றி ஞானம் அடைவது என்பது இயலாது.

தன்னை வயிற்றில் சுமந்தது மட்டுமின்றி, பிறந்தவுடன் இரவும், பகலும் கண் விழித்துப் பாதுகாத்த தாய்மைக்கு முதல் வணக்கம் செலுத்துவதுதான் முறை. குழந்தைகளுக்கு உடல் நலம் சரியில்லை என்றால் உறங்காமல் கண் விழித்துக் கவலையோடும், அக்கறையோடும் கவனிப்பவள் தாய். தன் குழந்தையின் மேல் அவ்வளவு அக்கறை. குழந்தை நல்ல முறையில் வளர்வதற்கு அதிக பிரயாசை எடுத்துக் கொள்ளுபவளும் அவளே.

இப்பிரபஞ்சம் பெண்மையைக் குறிக்கிறது. பூமியை 'பூமாதா' என்று அழைக்கிறோம். அனைவரும் பூமி என்கிற தாயின் குழந்தைகள் எல்லாவற்றுக்கும் தாய் முதன்மை பெற்றவள். தாயின் உள்ளுணர்வுகள் மேலானவை. அத்தகைய உணர்வுகளால் தான் இவ்வுலகத்தில் நன்மை கோரி ஆசிர்வதிக்கின்றாள் தாய்.

ஆனபடியால் அந்தத் தாயை மதித்து அவளுக்கு தரவேண்டிய வசதியைக் கொடுத்து வாழ வைக்க வேண்டியது பிள்ளைகளின் கடமை அவளைக் கண்ணீர் சிந்த வைத்தால் எந்தக் குடும்பமும் விளங்காது, வளராது. வாழாது ஆகையால் எந்த பெண்ணையும் துயரப்படும் வகையில் நாம் வைக்கக்கூடாது.

பெண்மணி இல்லாத வீடு காடு. பெண்மணி இருக்கும் வீடு இல்லம். (For Rest)

இப்படி பெண்களைப் பற்றியும் ஒரு தாயைப் பற்றியும் வீட்டைப் பற்றியும் எவ்வளவோ எடுத்துரைக்கலாம். ஒரு தாயானவள் தனது பிள்ளைகளை கண்ணும் கருத்துமாக வளர்த்து நல்லவராக்கி மேல் படிப்புக்களை படிக்கவைத்து நன்மை அடையச் செய்கிறாள். அந்த தாய்க்கே முதல் வணக்கம்.

(பாபா)

திருமதி. ஞானேஸ்வரி ஞானசேகரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடகம்

வடகம் பலவகை, வடகம் பொதுவாக சற்கரை வியாதிக்காரர்கட்கு, மிகவும் உகந்தது. வேப்பம்பூவில் செய்வதே முறையான வடகம். வேப்பம்பூ கிடைப்பது மிக அரிது, வேப்பம்இலை, குறிஞ்சாஇலை, தூதுவளம்இலை, பாவற்காய், கறிக்குப் பாவிக்க முடியாது நன்றாக முற்றிய முருங்கைக்காய், சுத்தமான முருங்கைப்பூ இவற்றில் எல்லாம் வடகம் செய்யலாம்.

தேவையான பொருட்கள் :- வேப்பம்பூ - 1/2 கிலோ
உழுத்தம் பருப்பு - 1 சுண்டு
வெங்காயம் - விரும்பிய அளவு
மிளகாய்ப் பொடி - விரும்பிய அளவு
கருவேப்பிலை - விரும்பிய அளவு
எள் - 2 மேசைக் கரண்டி
பெருஞ் சீரகம் - 2 மேசைக் கரண்டி
உப்பு - அளவாக

செய்முறை :- பொதுவாக வேப்பம்பூ வடகம் எல்லோருக்கும் தெரியும். காய்ந்த பூவிலும், உடன் பூவிலும் செய்யலாம். காய்ந்தபூவை நீரில் கழுவும் போது, காம்பு, மற்றும் தேவையற்றவை நீரின் அடியில் போகும். பூ மிதக்கும், பூவை நன்றாய் பிழிந்து எடுக்கவும். ஊறவைத்த உழுத்தம் பருப்பை நன்றாக அரைத்து அதனுடன் வெங்காயம், கருவேப்பிலை என்பனவற்றை மிகச்சிறிதாக வெட்டி, பிழிந்து எடுத்த பூ, மிளகாய்ப் பொடி, எள், பெருஞ் சீரகம், உப்பு இவற்றை எல்லாம் உழுந்துடன் கலந்து பிசைந்து, சிறிதாக தட்டி, வெய்யிலில் காயவைக்க வேண்டும். 3 நாள் காய்ந்தாலே போதும்.

மற்றும் முற்றிய முருங்கைக்காயின் சதையை கரண்டியால் வழித்து எடுத்து, முருங்கைக்காயின் சதையின் அளவுக்கேற்ப உழுத்தம் பருப்பு, வெங்காயம், மிளகாய்ப் பொடி, உப்பு என்பனவற்றை வேப்பம்பூ வடகத்துக்குச் செய்தது போல் செய்து, சிறிதாக தட்டி, வெய்யிலில் காயவைக்கவும்.

வேப்பம்இலை, குறிஞ்சாஇலை, தூதுவளம்இலை இவற்றை சிறிதாக வெட்டி, வடகம் செய்யும் கலவையுடன் கலந்து பிசைந்து, சிறிதாக தட்டி, வெய்யிலில் காயவைக்கலாம். எமக்கு எந்த இலை வசதியாய்க் கிடைக்குமோ அந்த இலையில் சுலபமாய் வடகம் செய்யலாம். இலை வடகம் மிகவும் ஆரோக்கியமானது. வேப்பம்இலையில் உடன் வடகம் செய்யவும்.

திருமதி சத்தியலெட்சுமி சிவலிங்கம்.
யாழ். இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊறுகாய்

தேசிக்காய் ஊறுகாய் யாவரும் அறிவர். நெல்லிக்காய், இஞ்சி, கரற், பாவற்காய் இவற்றில் தேசிக்காய் ஊறுகாய் போல் செய்யலாம்.

தேவையான பொருட்கள் :- நெல்லிக்காய் – விரும்பிய அளவு
தேசிக்காய் புளி – நெல்லிக்காய் வற்றலுக்கு அளவாக
வெந்தயம் – விரும்பிய அளவு
காய்ந்த மிளகாய் – விரும்பிய அளவு
உப்பு – அளவாக
மஞ்சல் – அளவாக

செய்முறை :- நெல்லிக்காயை ஆவியில் அவித்து, பின் விதை நீக்கி, வெய்யிலில் நன்றாக காயவைக்க வேண்டும். வற்றலுக்கு அளவான தேசிக்காய் புளியையும் காயவைக்க வேண்டும். வெந்தயம், காய்ந்த மிளகாய், மஞ்சல் இவற்றை காயவைத்து, மிக்சியில் மாவாக அரைக்க வேண்டும். பின் நெல்லிக்காய் வற்றலுடன் எல்லாவற்றையும் கலந்து போத்தலில் போட்டு நன்கு ஊறவிடவும், 3 நாள் வெய்யிலில் காயவைக்கவும்.

இஞ்சி, கரற், பாவற்காய் இவற்றையும் சிறிதாக வெட்டி காயவைத்து, வற்றலுடன் எல்லாவற்றையும் கலந்து போத்தலில் போட்டு வற்றல் மேலே வரும் வரை தேசிக்காய் புளியை விடவும். வற்றல் ஊற புளி கூடிய அளவு தேவை. உப்பு வேண்டிய அளவு சேர்க்க வேண்டும்.

திருமதி சத்தியலெட்சுமி சிவலிங்கம்.
யாழ். இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவி

3-9-2005

யாழ். இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்கம், கொழும்பு.
தலைவி, செயலாளர், செயற்குழு உறுப்பினர்கள்,

அன்புடையீர்.

எனது 40 ஆண்டு கால ஒலிபரப்பு சேவையை பாராட்டி விழா எடுத்து, சிறப்பு நூலையும் வெளியிட்டமைக்கு எனது சார்பிலும் குடும்பத்தினர் சார்பிலும் எனது மனப்பூர்வமான நன்றிகள். இருக்கும் பொழுதே என்னை கௌரவித்து என் மனம் மகிழ மகத்தான பரிசாக மலரை வழங்கிய அனைவரும் மகத்தானவர்கள். எல்லா நலன்களும் உங்களைச் சார வேண்டும்.

அன்புடன்
சற்சொரூபவதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதகம் – பாதகம்!

ராஜி ராதா

# ஜன்னல் ஓர ஸீட்டு!

பஸ்ஸிலோ ரெயிலிலோ செல்லும்போது குழந்தைகளாகட்டும், பெரியவர்களாகட்டும் ஜன்னல் ஓரங்களில் உட்காருவதையே பெரிதும் விரும்புகிறார்கள். இதற்குப் பல காரணங்கள் உண்டு. குழந்தைகள் வேடிக்கை பார்க்க விரும்புகின்றார்கள். பெரியவர்கள் குதப்பிய தாம்பூலத்தைத் துப்பவோ, ஓயாய்யாய் தூக்கம் போட விரும்பியோ ஜன்னல் ஓர ஸீட்டைத் தேர்ந்தெடுக்கிறார்கள்.

அந்தக் காலத்தில் ரெயில்களை நீராவி எஞ்சின்களே இழுத்தன. அதிலிருந்து கிளம்பும் புகைக் கரி சில சமயம் ஜன்னல் ஓர ஸீட்டுகளில் உட்கார்ந்திருப்பவர்களின் கண்களில் விழுந்து உறுத்தல் ஏற்பட்டுக் கண்களைச் சிவக்கச் செய்துவிடும். அதனால் குழந்தைகளை ஜன்னல் ஓரம் உட்காரவிடமாட்டார்கள். இப்போது இந்த நிலை மாறிவிட்டது. இருந்தும் ஜன்னல் ஓர ஸீட்டில் உட்காருவதில் ஆபத்து உள்ளது. சமீபத்தில் நடந்த ஒரு சம்பவமே இதற்குச் சரியான உதாரணம்.

சென்று கொண்டிருந்த ரெயிலின் அருகே சில சிறுவர்கள் விளையாடிக்கொண்டிருந்தனர். அவர்களை ரெயில் கடந்து செல்லும் போது கூழாங்கற்களைத் திடீரென்று எடுத்து வீசினர். அதில் ஒரு கல் ஜன்னல் வழியாக உள்ளே வந்து என் எதிரில் இருந்தவரின் இடது கையைப் பதம் பார்த்தது. பனியன், சட்டை அணிந்திருந்ததால் ரத்தம் வரும் அளவுக்கு அடி பலம் இல்லை என்றாலும், சிறிது நேரம் அவர் வலியால் துடித்தது பார்க்க வேதனையாக இருந்தது.

ரெயில் சென்று கொண்டிருக்கும்போது வெளியே மனிதர்களும், வயல் வெளிகளும், நம்மை வேகமாகக் கடந்து கொண்டிருக்கும். நகர்ப் புறங்களில், ஜனங்கள் வேகமாகச் சென்று கொண்டிருப்பார்கள். கிராமப் புறங்களிலோ மக்கள் நிதானமாகச் செல்வதைக் காணலாம். வண்டி ஸ்டேஷனுக்குள் நுழையும்போது, பிளாட்பாரத்தில் விற்கும் பதார்த்தங்களை வாங்கிச் சாப்பிட வசதியான ஸீட்டு.... ஜன்னல் ஸீட்டு!

அதுமட்டுமல்ல வண்டி பிளாட்பாரத்தில் நுழையும்போது மக்கள் கூட்டமாக நின்று காத்திருப்பதை பார்க்கத் 'திரில்'லாக இருக்கும். வண்டி நின்றதும் இடம் பிடிக்க அங்கும் இங்கும் ஓடுவதும்.. கண்கொள்ளாக் காட்சியே! பஸ்ஸில் ஜன்னல் ஸீட்டில் உட்கார்ந்தால் பிச்சைக்காரர் தொந்தரவு கட்டாயம் உண்டு.

பிறகு, நமது பஸ், ஏதாவது ஒரு ஊரில் நிற்கும்போது, அங்கு நிறையக் கூட்டம் ஏற இருந்தால் வெளியிலிருந்தபடியே சிலர் தங்கள் பைகளை நம்மிடம் கொடுத்து அக்கம் பக்கங்களில் தங்களுக்காக ஸீட்டுகளை ரிசர்வேஷன் செய்யச் சொல்லுவார்கள்.

ஒரு முறை மதுரையில் பஸ் ஸ்டாண்டில் நடந்த சம்பவம் மறக்க முடியாதது.... ஜன்னல் ஓரம் உட்கார்ந்திருந்த ஒரு பெண்ணிடம் மற்றொரு பெண்மணி, கீழிருந்தபடியே தன் பைகளைக் கொடுத்து அருகில் ஸீட்டு போடச் சொல்லிவிட்டுக் கூட்டத்தில் ஏறி வந்து பார்த்தால் பையையும் காணோம்! பையை வாங்கி உள்ளே வைத்த அந்தப் பெண்ணையும் காணோம்...! ஏராளமான நகையுடன் அந்தப் பை அம்பேஸ்! பிறகு அந்தப் பெண்மணியை இறக்கிவிட்டுவிட்டு பஸ் புறப்பட்டது.

பேருந்து ஓர ஸீட்டுகளில் வலப் புறம் உட்காரும்போது கவனம் தேவை. என்னுடைய நண்பரின் மனைவி ஒருவர், கெட்ட நேரமோ என்னவோ, சில வினாடிகள்தான் கையை வெளியே நீட்டினார்... ஆனால் அதற்குள் எதிரில் ஒரு லாரி வந்து மோதி.., அவர் கை துண்டித்து விழுந்தது! ஆகவேதான் பஸ்களில் 'கரம், சிரம், புறம் நீட்டக்கூடாது' என எழுதி வைக்கின்றனர். அதுவும் குழந்தைகள் உட்கார்ந்தால் மிகவும் ஜாக்கிரதையாக இருக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். சிலர் வலது புறத்தில் விபத்துகள் ஏற்பட வாய்ப்பு அதிகம் இருப்பதால் அந்தப் பக்கமே உட்காரமாட்டார்கள். அவர்கள் உயிர்கள் மீது அவர்களுக்கு அவ்வளவு அக்கறை.

இப்படி பஸ்ஸில் ஓர ஸீட்டில் உட்கார்ந்து செல்பவர்களால் தெருவில் செல்பவர்களுக்கும் பிரச்சனை ஏற்படுவது உண்டு. ஒரு பஸ் வேகமாக வந்து கொண்டிருந்தது. நீழே நானும் நண்பனும் நடந்து கொண்டிருந்தோம். அப்போது பஸ்ஸில் ஓர ஸீட்டில் இருந்த ஒருவர். வாய் நிறையத் தண்ணீரை நிரப்பிக்கொண்டு, பஸ் எங்களைக் கடந்து செல்லும் போது குபுக்கென்று தண்ணீரை நண்பனின் முகத்தில் துப்பிவிட்டுச் சிரித்தார்! நண்பன் திகைத்து நின்றபோது, அசிங்கமாய் கைகாட்டிவிட்டு மேலும் சிரித்தார். நாங்கள் சுதாகரித்து பஸ்ஸைப் பிடித்து ஏறுவதற்கு முன் பஸ் சென்று விட்டது! அடுத்தவர் முகத்தில் தன் வாய்த் தண்ணீரைத் துப்பி... சந்தோஷம் காணும் ஜன்மங்களும் உண்டு!

பஸ்ஸில் முன்பின் சென்றிராத ஊருக்குச் செல்லும்போது, வழியில் பல புதிய ஊர்களைக் காணும்போது, அடடா... இந்த ஊரா என நாம் பார்த்து வியப்பது உண்டு. மேலும் இறங்கவேண்டிய இடத்தை, பஸ் செல்லும் பாதையில் உள்ள கடைகளில் தென்படும் முகவரியை வைத்தே ஓரளவுக்குக் கண்டுபிடித்து, மற்றவர்களிடம் கேட்காமல் இறங்கி விடலாம்.

மொத்தத்தில் ஜன்னல் ஸீட்டுப் பயணம்... 'திரில்'லானது... அதை விரும்பாதவர்களே இருக்க முடியாது! சில நேரங்களில் ஆபத்து இருந்தாலும்... இந்த ஸீட்டின் சுகமே தனி...!

*நன்றி மஞ்சரி மார்ச் 1992*

OGA Canada Endowment Fund (with OGA Colombo)

| | |
|---|---|
| Balance as at 1st January, 2004 | 222,802.22 |
| Add Interest | 8,819.70 |
| | 231,621.92 |
| Less Withdrawals | (231,621.92) |
| | - |

On the request of OGA Canada the sum in the Endowment Fund was withdrawn and sent to our College. The College utilized the fund for the purchase of furniture and other essential items required.

Late Mr. C. Shanmugam Trust Fund

| | |
|---|---|
| Investment in Treasury Bills | 250,000.00 |
| Add: Interest earned during the year | 868.72 |
| | 250,868.72 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்கம் அவுஸ்திரேலியா (சிட்னி) கிளையினரின் பாராட்டுச் செய்தி

கடந்த பன்னிரண்டு ஆண்டுகளாக யாழ் இந்து மகளிர் கல்லூரியின் அதிபராகக் கடமையாற்றிய திருமதி. சரஸ்வதி ஜெயராசா 14.01.2006 இல் தமது பதவியில் இருந்து இளைப்பாறுகின்றார் என்ற செய்தியை அறிந்தோம். தமது பதவிக்காலத்தில் திருமதி. சரஸ்வதி ஜெயராசா அவர்கள் செய்த அளப்பரிய சேவைகளை நாம் என்றும் மறக்க முடியாது.

அதிபராகப் பதவியேற்ற சில வருடங்களுக்குள் நாட்டில் ஏற்பட்ட போர்க்காலச் சூழலில் கல்லூரி மாணவிகள் கல்விக்கு தடங்கல் ஏற்படாத வண்ணம் அவர் எடுத்த முயற்சிகளை நாம் அறிவோம். மேலும் சேதமடைந்த எமது கல்லூரியை மீண்டும் கட்டியெழுப்ப அவர் அயராது உழைத்தமைக்கு இன்று புதுப்பொலிவுடன் விளங்கும் எமது கல்லூரியும், புதிதாக அமைக்கப்பட்ட நூல் நிலையம், விஞ்ஞான கூடம் கணணி அறை என்பனவும் சான்றாக விளங்குகின்றன.

இவற்றுடன் எமது சங்கத்தின் செயற்பாடுகளுக்கு – சிறப்பாக எமது கல்லூரியின் வைர விழா நிகழ்வில் நாம் தொடக்கி வைத்த நிலையான 'பரிசில் நிதியத்தை' உருவாக்கும் முயற்சியில் – எமக்கு தேவையான உதவிகளை நாம் கேட்ட பொழுது எல்லாம் ஆர்வத்துடன் செய்துள்ளார்.

இவற்றை நினைவு கூர்ந்து எமது பாராட்டுகளையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

யாழ் இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்கம்
அவுஸ்திரேலியா (சிட்னி) கிளை
2005/2006

## கல்லூரியின் சிறந்த மாணவிகள்

2001 செல்வி காயத்திரி சிற்சபேசன்
2002 செல்வி ஜெயப்பிரபா ஜெகதீஸ்வரன்
2003 செல்வி நிலக்ஷி மகாதேவா
2004 செல்வி துளசி கந்தசாமி
2005 செல்வி பாமினி பரஞ்சோதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# யாழ். இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்கம் கொழும்பு. பன்னிரண்டாம் ஆண்டு (2005) அறிக்கை

(05-02-2005 தொடக்கம் 11-02-2006 வரையும்)

சங்கத்தின் 11வது ஆண்டுப் பொதுக் கூட்டம் 2005ஆம் ஆண்டு பெப்பிரவரி மாதம் 5ஆம் திகதி கொழும்பு 4, லொறன்ஸ் வீதி 75ஆம் இலக்கத்திலுள்ள சரஸ்வதி மண்டபத்தில் தலைவி திருமதி அபிராமி கயிலாசபிள்ளையின் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு 17 அங்கத்தவர்கள் வருகை தந்திருந்தார்கள்.

அங்கத்தவர்கள் எல்லோரும் சேர்ந்து பாடிய தேவாரத்துடன் கூட்டம் ஆரம்பமாகியது.

நடப்பு ஆண்டிற்கான செயற்குழு அங்கத்தவர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

போஷகர்கள் - திருமதி லீலா நாகரத்தினம்
- திருமதி உமாராணி குமாரசுவாமி

தெரிவு செய்யப்பட்ட நிர்வாகக்குழு

தலைவி - திருமதி அபிராமி கயிலாசபிள்ளை

உபதலைவர்கள் - செல்வி சற்சொரூபவதி நாதன்
- திருமதி தயாநிதி செல்வநாயகம்
- திருமதி பரமேஸ்வரி பாலசிங்கம்

பொதுச்செயலாளர் - திருமதி விமலா மணிவாசகன்

உதவிச்செயலாளர்கள் - செல்வி சிவமலர் சுப்பிரமணியம்
- செல்வி வத்சலா நாகலிங்கம்

பொருளாளர் - திருமதி சிவகாமி அம்பலவாணர்

உதவிப்பொருளாளர் - திருமதி கமலா கணபதிப்பிள்ளை

நிர்வாகக்குழுவினர் - செல்வி ஞானலக்ஷ்மி பாலசிங்கம்
திருமதி பொன்மலர் கந்தசாமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமதி ருக்மணி அரசரத்தினம்
திருமதி பரமேஸ்வரி சச்சிதானந்தன்
திருமதி மிதிலா ஸ்ரீ பத்மநாதன்
திருமதி கலைச்செல்வி நிரஞ்சன்
திருமதி சிவச்செல்வி சிலலோகநாதன்
திருமதி ஞானேஸ்வரி ஞானசேகரம்
திருமதி நந்தினி மோகன்
திருமதி கமலா கனகசபை
திருமதி மல்லிகாதேவி சரவணபவான்
திருமதி கோமளாம்பாள் செல்வரத்தினம்
திருமதி சத்தியலசஷ்மி சிவலிங்கம்
திருமதி இந்திராணி சோமசுந்தரம்
திருமதி கௌரி தேவசேனாதிபதி
திருமதி சிந்தாமணி வன்னியசேகரம்
திருமதி திலகா விஜயரத்தினம்
திருமதி புவனேஸ்வரி யோகலிங்கம்
திருமதி கமலருளேஸ்வரி சர்வானந்தா
திருமதி மஞ்சுளா ஜீவலிங்கம்
திருமதி தயாநிதி உதயகுமார்
திருமதி மனோன்மணி அருணாசலம்
திருமதி சாரதாம்பாள் மனோகரன்
செல்வி கலையரசி சண்முகநாதன்
செல்வி ஆரணி குமாரசிங்கம்

கணக்குப் பரிசோதகர்: கணேஷலிங்கம் அன்ட் கொம்பனி, சார்ட்டட் அக்கவுண்டன்ஸ், 16 B Schofield Place, கொழும்பு 3.

யாழ் நாதம் ஆசிரியை: திருமதி சிவகாமி அம்பலவாணர்

சங்க அங்கத்தவர்கள் எல்லோரும் சங்க அலுவல்களில் ஈடுபடுவதற்காக பின்வரும் உப குழுக்கள் தெரிவு செய்யப்பட்டன.

உறுப்புரிமைக்குழு
திருமதி ருக்மணி அரசரட்ணம்
திருமதி பரமேஸ்வரி பாலசிங்கம்
திருமதி கலைச்செல்வி நிரஞ்சன்

இலக்கிய கல்விக்குழு
திருமதி பரமேஸ்வரி சச்சிதானந்தன்
திருமதி ஞானேஸ்வரி ஞானசேகரம்
திருமதி திலகா விஜயரத்தினம்

ஆண்டுப் பொதுக் கூட்டத்திற்கு பின்வருவோர் பலகாரங்களும் பானமும் கொண்டு வந்தார்கள்:-

செல்வி வத்சலா நாகலிங்கம் - வடை,
திருமதி ருக்மணி அரசரட்ணம் - கேசரி,
திருமதி விமலா மணிவாசகன் - உறைப்பு அல்வா,
திருமதி சிவகாமி அம்பலவாணர் - பானம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டம் எல்லோரும் சேர்ந்து பாடிய தேவாரத்துடன் பிப. 4.30 மணியளவில் இனிதே நிறைவேறியது.

* * * * * * * *

இந்த வருடத்தில் பின்வரும் முக்கிய நிகழ்வுகள் நடைபெற்றன

1. புது வருட மலிவு விற்பனை ஒன்றை நடத்தினோம்

2 செல்வி சற்சொரூபவதி நாதனுக்கு "சகலகலாவித்தகி" என்ற விருதை வழங்கிக் கௌரவித்தோம்.

3. எங்கள் சங்கத் தலைவி திருமதி அபிராமி கயிலாசபிள்ளைக்கு கம்பன் புகழ் விருது கிடைத்தமையைப் பாராட்டினோம்

4. யாழ் நாதம் இதழ் 11 வெளியீட்டையும், செல்வி சற்சொரூபவதி நாதனின் கௌரவ இணைப்பிதழ் வெளியீட்டையும் நடத்தினோம்.

5. எங்கள் கல்லூரிப் பழைய ஆசிரியை செல்வி இந்திரா பாலசிங்கத்திற்கு (தற்போது திருமதி இந்திரா கந்தசாமி பிள்ளை) தேநீர் விருந்து அளித்தோம்

6. வருடாந்த ஒன்று கூடல் நிகழ்வை நடத்தினோம்.

7. கல்லூரியின் சிறந்த மாணவிக்குப் பொன்விருது வழங்கினோம்.

8. யாழ் இந்து மகளிர் கல்லூரி மாணவிகளுக்கு உதவி

9. யாழ் இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை மாணவிகளுக்கு உதவி

10. எங்கள் சங்கம் ஸ்தாபித்த www.jhlc.lk என்ற கல்லூரி இணையத்தளத்தை தொடர்ந்து நிர்வகித்து வருகிறோம்.

11. உலககஉற்றாடல்தினப் போட்டிக்கு கொழும்பிற்கு வருகை தந்த யாழ் இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை மாணவிகளை உபசரித்தோம்.

12. ஆசிச் செய்தியும், அழைப்பும், பாராட்டு மடலும்.

13. காலஞ்சென்ற திரு செல்லையா சண்முகத்தின் பிள்ளைகளும் பேரப்பிள்ளைகளும் கல்லூரிக்கு நிதி உதவி வழங்கினார்கள்.

* * * * * * * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சங்கத்தின் நடப்பு ஆண்டில் நடைபெற்ற செயற்குழுக் கூட்டங்கள்

| திகதி | இடம் | வரவு |
|---|---|---|
| 12.03.2005 | சரஸ்வதி மண்டபம் 75 லொறன்ஸ் வீதி, கொழும்பு 4, | 11 |
| 30.04.2005 | சரஸ்வதி மண்டபம் 75 லொறன்ஸ் வீதி, கொழும்பு 4, | 12 |
| 07.05.2005 | சரஸ்வதி மண்டபம் 75 லொறன்ஸ் வீதி, கொழும்பு 4, | 10 |
| 11.06.2005 | சரஸ்வதி மண்டபம் 75 லொறன்ஸ் வீதி, கொழும்பு 4, | 14 |
| 25.06.2005 | சரஸ்வதி மண்டபம் 75 லொறன்ஸ் வீதி, கொழும்பு 4, | 14 |
| 03.09.2005 | சரஸ்வதி மண்டபம் 75 லொறன்ஸ் வீதி, கொழும்பு 4, | 09 |
| 17.12.2005 | சரஸ்வதி மண்டபம் 75 லொறன்ஸ் வீதி, கொழும்பு 4, | 10 |
| 07.01.2006 | சரஸ்வதி மண்டபம் 75 லொறன்ஸ் வீதி, கொழும்பு 4, | 08 |

12.03.2005 அன்று நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்திற்கு திருமதி கமலா கணபதிப்பிள்ளை பானமும் திருமதி கலைச்செல்வி நிரஞ்சன் வடையும் கொண்டு வந்தார்கள்.

07.01.2006 அன்று நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தின் போது திருமதி ருக்மணி அரசரத்தினம் ஐஸ் கோப்பி கொண்டு வந்தார்.

18.01.2006 அன்றும் 26.01.2006 அன்றும் திருமதி பரமேஸ்வரி பாலசிங்கத்தின் இல்லத்தில் சர்வதேச மகளிர் தின விழா ஏற்பாடுகள் பற்றிய விசேட கூட்டங்கள் நடைபெற்றன. அவர் சிற்றுண்டியும், தேநீரும் வழங்கினார். 18ஆம் திகதி 6 அங்கத்தவர்களும் 26ஆம் திகதி 11 அங்கத்தவர்களும் வருகை தந்திருந்தார்கள்.

## நடப்பு ஆண்டில் நடைபெற்ற ஏனைய நிகழ்வுகள்

| திகதி | நிகழ்வு | இடம் | வரவு |
|---|---|---|---|
| 05.01.2005 | ஆண்டுப் பொதுக் கூட்டம் | சரஸ்வதி மண்டபம் | 17 |
| 25.03.2005 | புதுவருட மலிவு விற்பனை | சரஸ்வதி மண்டபம் | 20 |
| 02.04.2005 | சற்சொரூபவதியின் கௌரவம் | சண்முகதாஸ் ஹோட்டல் | 25 |
| 11.06.2005 | திருமதி அபிராமிக்கு பாராட்டு | சரஸ்வதி மண்டபம் | 14 |
| 02.07.2005 | யாழ்நாதம் இதழ் 11, இணைப்பிதழ் | சரஸ்வதி மண்டபம் | 30 |
| 11-07-2005 | தேநீர் விருந்து உபசாரம் | சிவச்செல்வி இல்லத்தில் | 12 |
| 22.10.2005 | ஒன்றுகூடல் நிகழ்வு | சண்முகாஸ் ஹோட்டல் | 29 |

* * * * * * * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

– 1 –

2005ஆம் ஆண்டு மார்ச் மாதம் 25ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10.00 மணியிலிருந்து மாலை 7.00 மணிவரை கொழும்பு 4, லொறன்ஸ் வீதி 75ஆம் இலக்கத்தில் உள்ள சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்ற புதுவருட மலிவு விற்பனை.

இந்த மலிவு விற்பனையை ஒழுங்கு செய்யும் பொறுப்பை திருமதி மிதிலா ஸ்ரீ பத்மநாதன் ஏற்றுக்கொண்டார். திருமதி கமலாதேவி கணபதிப்பிள்ளையும், திருமதி சிவகாமி அம்பலவாணரும் அவருக்கு உதவியாக முக்கிய பொறுப்புகளை ஏற்றுக்கொண்டனர். திருமதி பரமேஸ்வரி பாலசிங்கம் பிரதம அதிதியை அழைக்கும் பொறுப்பை ஏற்றார்.

| | |
|---|---|
| திருமதி மிதிலா ஸ்ரீ பத்மநாதன் | சேலை, ஏனைய உடைகள் |
| திருமதி கமலாதேவி கணபதிப்பிள்ளை | கடைகளை ஒழுங்கு செய்தார். |
| திருமதி சிவகாமி அம்பலவாணர் | உணவுப் பொருட்கள், பானங்களை ஒழுங்கு செய்தார். |

பிரதம அதிதிகளாக பிரபல மாலவன்ஸ் இறக்குமதி கொம்பனி நிர்வாகஸ்தர்கள் "திரு கேசுநாதன் – திருமதி புஷ்பராணி கேசுநாதன்" ஆகியோர் வருகைதந்தார்கள்.

திருமதி அபிராமி கயிலாசபிள்ளை, திருமதி பரமேஸ்வரி பாலசிங்கம் ஆகியோர் குத்துவிளக்கு ஏற்றினார்கள். பிரதம அதிதிகளை செல்வி சற்சொரூபவதி நாதன் பழத்தட்டு கொடுத்து வரவேற்றார்.

மலிவு விற்பனைக்கு பின்வருவோர் சிற்றுண்டி வகைகளையும், குளிர் பானத்தையும் கொண்டு வந்தார்கள்:-

| | |
|---|---|
| திருமதி அபிராமி கயிலாசபிள்ளை | சான்ட்விச், தயிர்ச்சாதம், புளிச்சாதம் |
| திருமதி பரமேஸ்வரி சச்சிதானந்தன் | கேக் |
| திருமதி தனபாக்கியம் நித்தியானந்தன் | கேசரி |
| செல்வி சிவமலர் சுப்பிரமணியம் | பருத்தித்துறை வடை, முறுக்கு |
| திருமதி பரமேஸ்வரி பாலசிங்கம் | தோடம்பழத் தண்ணீர் |
| திருமதி ருக்மணி அரசரட்ணம் | மிச்சர் |
| திருமதி கலைச்செல்வி நிரஞ்சன் | கேசரி |
| திருமதி சாரதாம்பாள் மனோகரன் | பருத்தித்துறை வடை, லட்டு |
| திருமதி நாகேஸ்வரி கனகசபை | பயித்தம்உருண்டை, அச்சுமுறுக்கு |

செல்வி சிவமலர் சுப்பிரமணியம் மரக்கறிகள் ஒழுங்கு செய்தார்.
திருமதி அபிராமி கயிலாசபிள்ளை ஜாம் ஒழுங்கு செய்தார்.

பின்வருவோர் மேசைகள் எடுத்தார்கள்:-

| | | |
|---|---|---|
| திருமதி மிதிலா ஸ்ரீ பத்மநாதன் | 2 | "KALANJALI SAREES" |
| திரு சிவகுமார் (திருமதி அங்கயற்கண்ணி சிவப்பிரகாஷ் மூலமாக) | 1 | "புதுமையான நகைகள்" |
| திரு திவாகர் (திருமதி கமலாதேவி கணபதிப்பிள்ளை மூலமாக) | 1 | "பொடிகள்" "இனிப்புகள்" |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| திருமதி சிவகாமி அம்பலவாணர் | 1 | "அங்கத்தவர் பத்திரம்" |
| திரு கண்ணன் (திருமதி கமலாதேவி கணபதிப்பிள்ளை மூலமாக) | 1 | "INDIAN CARDS" |
| திரு கண்ணன் (திருமதி கமலாதேவி கணபதிப்பிள்ளை மூலமாக) | 1 | "புத்தகம்" "செருப்பு" |
| செல்வி சிவமலர் சுப்பிரமணியம் | 1 | "மரக்கறிகள்" |
| திருமதி அபிராமி கயிலாசபிள்ளை | 1 | "உணவு வகைகள்" |
| திருமதி புவனேஸ்வரி யோகலிங்கம் | 1 | "அன்பளிப்பு" |

செயலாளர் திருமதி விமலா மணிவாசகன் மண்டப ஒழுங்குகள் எல்லாவற்றையும் செய்தார்.

மேசை ஒன்றிற்கு ரூபா 1,000 நன்கொடையாகத் தந்தார்கள். படம் எடுத்த செல்வன். வேணுகோபனுக்கு எமது மனமார்ந்த நன்றிகள்.

* * * * * * * *

– 2 –

# கௌரவம்

இந்த நிகழ்விற்கு "யாழ் இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்கம் கொழும்பு" இன் உறுப்பினர்களும், அவர்களின் குடும்பத்தினரும், நண்பர்களும் வருகை தந்திருந்தார்கள். சங்கத்தலைவியின் தலைமையில் செல்வி. சற்சொரூபவதி நாதனின் 40 வருட ஒலி பரப்புச் சேவைத் திறனைப் பாராட்டி கௌரவித்தார்கள். இந்த வைபவம் வெள்ளவத்தையில் உள்ள சண்முகாஸ் ஹோட்டலில் 02.04.2005ஆம் திகதி மாலை 7.00 மணிக்கு இராபோசன விருந்துடன் நடைபெற்றது.

சங்கத்தலைவி திருமதி அபிராமி கயிலாசபிள்ளை செல்வி. சற்சொரூபவதி நாதனுக்கு பூமாலை அணிவித்து வரவேற்றார். பின்னர் அவரின் தலைமையுரையுடன் விழா ஆரம்பமாகியது. உபதலைவி திருமதி பரமேஸ்வரி பாலசிங்கம் செல்வி. சற்சொரூபவதி நாதனுக்கு பொன்னாடை போர்த்து, தனது உரையை நிகழ்த்தினார். உபதலைவி திருமதி தயாநிதி செல்வநாயகம் செல்வி. சற்சொரூபவதி நாதனுக்கு பூமாலை அணிவித்து, தனது பாராட்டுரையை நிகழ்த்தினார்.

எமது சங்க போஷகரான திருமதி லீலா நாகரத்தினம், சங்கத்தின் சார்பில் செல்வி. சற்சொரூபவதி நாதனுக்கு "சகலகலாவித்தகி" என்ற விருதை வழங்கி தனது சிறப்புரையை நிகழ்த்தினார். கனடாவில் இருந்து வருகைதந்திருந்த திருமதி லோகநாயகி அருளலிங்கம் செல்வி. சற்சொரூபவதி நாதனுக்கு தனது அன்பளிப்பை வழங்கினார். செல்வி. சற்சொரூபவதி நாதனும் எல்லோரையும் பாராட்டியும், நன்றி கூறியும் தனது ஏற்புரையை நிகழ்த்தினார்.

செயலாளர் திருமதி விமலா மணிவாசகன் அன்பளிப்பாக பேன்சி (fancy) மாலையை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வி. சற்சொரூபவதி நாதனுக்கு அணிவித்தார். பொருளாளர் திருமதி சிவகாமி அம்பலவாணர் பாராட்டுரையையும் நன்றியுரையையும் வழங்கினார். ஊடகவியலாளரில் ஒருவரான திருமதி அருந்ததி ஸ்ரீரங்கநாதனும் தனது உரையை வழங்கினார். பின்னர் இராப்போசன விருந்து நடைபெற்றது.

சண்முகாஸ் ஹோட்டலை ஒழுங்கு செய்து, இந்த வைபவம் சிறப்பாக நடைபெற பலவகையிலும் உழைத்த திருமதி அபிராமி கயிலாசபிள்ளைக்கும், அவருக்கு உதவியாக இருந்த திருமதி பரமேஸ்வரி பாலசிங்கத்துக்கும், படம் எடுத்த செல்வன். வேணுகோபனுக்கும், திரு. இராமலிங்கத்துக்கும் எமது மனமார்ந்த நன்றிகள். இறுதியாக திரு. அரசரத்தினத்தின் உரையுடன் விழா இனிதே நிறைவு பெற்றது.

* * * * * * * *

– 3 –

பாராட்டு: 2005ஆம் ஆண்டிற்கான கம்பன் புகழ் விருது பெற்ற எங்கள் சங்கத் தலைவி திருமதி அபிராமி கயிலாசபிள்ளைக்கு சிறு பாராட்டு 2005ஆம் ஆண்டு ஜூன் மாதம் 11ஆம் திகதி சனிக்கிழமை மாலை 5.00க்கு சரஸ்வதி மண்டபத்தில் தெரிவித்தோம். இப் பாராட்டின்போது சங்கத்தின் சார்பில சங்கப் போஷகர் திருமதி லீலா நாகரட்ணம் 'In appreciation of the honour bestowed upon you by Kamban Kalagam.' என்ற வாசகம் பொறித்த சிகிரியா படத் தட்டு ஒன்றைப் பரிசாக அளித்தார். இப் பாராட்டுக்கு 14 அங்கத்தவர்கள் சமூகமளித்திருந்தனர். இந்த நிகழ்வின் புகைப்படங்களை Video Blossom எடுத்து உதவினார்கள்.

* * * * * * * *

– 4 –

'யாழ்நாதம் இதழ் 11 - புகழ் பூத்த மாணவி சற்சொரூபவதியின் 40 வருட ஒலிபரப்புச் சேவைத் திறனைக் கௌரவிக்கும் மலர்' வெளியீடு, பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் 02.07.2005 திகதி சனிக்கிழமை பி.ப. 05.00 மணி தொடக்கம் இரவு 08.00 மணி வரைக்கும் நடைபெற்றது.

தேவாரத்தையும், கல்லூரி கீதத்தையும் சகோதரிகள் 'திருமதி. சிவச்செல்வி சிவலோகநாதன் – திருமதி. குகஜோதி விஜயநாயகம்' பாடினார்கள். திருமதி. அபிராமி கயிலாசபிள்ளை தலைமை உரையை நிகழ்த்தினார். செல்வி. மாலா சபாரட்ணம் பிரதம அதிதி உரையை வழங்கினார்.

பட்டி மன்றம்: 'பெண்களின் கலாசாரத்தில் அதிக மாற்றத்தினை ஏற்படுத்துவது தொலைக்காட்சியே' என்னும் தலைப்பில் கொழும்புப் பல்கலைக் கழக மாணவிகள் செல்வி கோகிலா பாலசுந்தரம், செல்வி தட்சாயணி குலேந்திரன், செல்வி தேவிகா கந்தசாமி, செல்வி ஜனனி சிவசுப்பிரமணியம் ஆகியோர் சார்பாகவும், எதிராகவும் விவாதித்தார்கள். நடுவராக செல்வி கங்கா சத்தீஷ் பங்கு பற்றுவதாக இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவிர்க்க முடியாத காரணத்தால் அவரால் வரமுடியவில்லை. அவருக்காக செல்வி சற்சொரூபவதி நாதன் நடத்துனராக பங்கு பற்றினார்.

பட்டி மன்றம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது மறுபுறம் வந்திருந்த சபையோருக்கு சங்க அங்கத்தவரும், அவர்களின் பிள்ளைகளும், நண்பர்களும் சிற்றுண்டியும், குளிர்பானமும் வழங்கினார்கள். பங்குபற்றிய மாணவிகளுக்கு பிரதம அதிதி பரிசளித்தார்.

திருமதி பரமேஸ்வரி பாலசிங்கம் நிகழ்ச்சித் தொகுப்பை நடத்தினார்.

கௌரவிப்பு :-
பிரதம அதிதி செல்வி. மாலா சபாரட்ணம் செல்வி சற்சொரூபவதி நாதனுக்கு பொன்னாடை போர்த்து கௌரவித்தார். திருமதி. அபிராமி கயிலாசபிள்ளை செல்வி சற்சொரூபவதி நாதனுக்கு மாலை அணிவித்து கௌரவித்தார். செல்வி சற்சொரூபவதி நாதனுக்கு பிரதம அதிதி செல்வி. மாலா சபாரட்ணம் முதல் பிரதியை வழங்கினார். பின்பு சபையோரும் செல்வி சற்சொரூபவதி நாதனை கௌரவித்தார்கள்.

பிரதம அதிதி செல்வி. மாலா சபாரட்ணத்தை போஷகர் திருமதி. லீலா நாகரட்ணம் பொன்னாடை போர்த்து கௌரவித்தார். திருமதி. அபிராமி கயிலாசபிள்ளை செல்வி. மாலா சபாரட்ணத்துக்கு மாலை அணிவித்தார். பிரதம அதிதிக்கு போஷகர் திருமதி. லீலா நாகரட்ணம் நூலை வழங்கினார். திருமதி சிவகாமி அம்பலவாணர் போஷகர் திருமதி. லீலா நாகரட்ணத்துக்கு மாலை அணிவித்தார். திருமதி. அபிராமி கயிலாசபிள்ளை போஷகர் திருமதி. லீலா நாகரட்ணத்துக்கு நூலை வழங்கினார்.

திருமதி சிவகாமி அம்பலவாணர் யாழ்நாதத்தினை (இதழ் 11) அறிமுகம் செய்தார். திருமதி பரமேஸ்வரி பாலசிங்கம் இணைப்பிதழை அறிமுகம் செய்தார். ஏற்புரையை செல்வி சற்சொரூபவதி நாதன் நிகழ்த்தினார். மேடையில் செல்வி சற்சொரூபவதி நாதன் நூலை சிறப்பு விருந்தினர்களுக்கு வழங்கினார். சபையில் அங்கத்தவர்கள் நூலை விநியோகித்தார்கள்.

திருமதி விமலா மணிவாசகன் நன்றியுரையை நிகழ்த்தினார். திருமதி சத்தியலட்சுமி சிவலிங்கம் செல்வி சற்சொரூபவதி நாதனுக்கு வாழ்த்துப்பாடல் பாடியும், (பாடல் கீழே உள்ளது) தேவாரம் பாடியும், விழாவை நிறைவு செய்தார். இவ்விழா இனிதே நடைபெற்று நிறைவு பெற்றது.

# செல்வி சற்சொரூபவதிக்கு வாழ்த்துப்பா

இயற்றியவர் - திருமதி திலகா வி. விஜயரத்தினம்
பாடியவர் - திருமதி சத்தியலட்சுமி சிவலிங்கம்

திகதி - 2005-07-02 July 2 nd 2005

வாழிய வாழியவே தோழி நீ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழிய வாழியவே யிவ்
வாழி சூழ் இலங்கை முத்தின் முத்தே
வாழிய வாழியவே

இலங்கை வானொலி சொல்லின் செல்வியே
துலங்கு முன் பேர் என்றும் ஆண்டாண்டாய்
விளங்குமெம் இந்து மகளிர் கல்லூரியின்
சிறந்த மாணவி நீ என்றும் என்றுமே - உனை

பல்லாண்டு பல்லாண்டு வாழ்க
வாழ்க வென
கல்லூரிப் பழம் மாணவிகள் நாம்
கனிந்து வாழ்த்துவோமே.

உதவி செய்தோர்:-

ஒலி, படம் ஒழுங்குசெய்தல் - திருமதி அபிராமி கயிலாசபிள்ளை
கௌரவிப்பு - திருமதி அபிராமி கயிலாசபிள்ளை

பலகாரம் சபையில் கொடுத்தல்: - செல்வி சிவமலர் சுப்பிரமணியம்
- திருமதி ருக்மணி அரசரட்ணம்
- திருமதி பொன்மலர் கந்தசாமி
- செல்வி கலையரசி சண்முகநாதன்

பலகாரம் மலர்கள் வெளியே கொடுத்தல்: - திருமதி திலகா விஜயரத்தினம்

மேடை உதவி: - திருமதி விமலா மணிவாசகன்
- செல்வி வத்சலா நாகலிங்கம்
- திருமதி மஞ்சுளா ஜீவலிங்கம்

யாழ்நாத வெளியீடு உதவி: - திருமதி சிவகாமி அம்பலவாணர்
- திருமதி கமலா கணபதிப்பிள்ளை
- திருமதி கலைச்செல்வி நிரஞ்சன்

ஆசனங்கள் ஒழுங்கு - திருமதி ஞானேஸ்வரி ஞானசேகரம்
- திருமதி சாரதாம்பாள் மனோகரன்
- திருமதி சத்தியலட்சுமி சிவலிங்கம்

ஒலி தந்து உதவியவருக்கும், படங்கள், விடியோ படங்கள் எடுத்த எல்லோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

* * * * * * * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

– 5 –

செல்வி இந்திரா பாலசிங்கத்துக்கு (தற்போது திருமதி கந்தசாமி பிள்ளை) அவரிடம் தாவரவியல் கற்ற மாணவிகள் அளித்த தேநீர் விருந்து உபசாரம் :-

இத்தேநீர் விருந்து உபசாரம் திருமதி. சிவச்செல்வி சிவலோகநாதனின் இல்லத்தில் 2005-07-11ஆம் திகதி மாலை 05.00 மணிக்கு ஆரம்பமாகியது. இத்தேநீர் விருந்து உபசாரத்துக்கு ஆசிரியர்களான செல்வி இந்திரா பாலசிங்கமும் அவரது மூத்த ச்கோதரியும் எங்கள் கல்லூரிப் பழைய ஆசிரியையுமான திருமதி. சாவித்திரி மகேசனும் சமுகமளித்திருந்தார்கள். திருமதி சாவித்திரி மகேசன் தாவரவியலும் விலங்கியலும் கற்பித்தார்கள் இந்த ஆசிரியைகள் இருவரதும் மாணவிகளான திருமதி. அபிராமி கயிலாசபிள்ளை, திருமதி சிவகாமி அம்பலவாணர், திருமதி பரமேஸ்வரி பாலசிங்கம், திருமதி. சிவச்செல்வி சிவலோகநாதன், திருமதி. குகஜோதி விஜயநாயகம், திருமதி. கமல அருளேஸ்வரி சர்வானந்தா, செல்வி சீதா செல்லையா, திருமதி. பஞ்சலஷ்மி பத்மநாதன், திருமதி. சர்வேஸ்வரி சிதம்பரநாதன், திருமதி. புஷ்பகாந்தி சோதிலிங்கம் சங்கச் செயலாளர் திருமதி விமலா மணிவாசகன் ஆகியோர் வருகைதந்திருந்தார்கள்.

செல்வி இந்திரா பாலசிங்கத்துக்கு மாணவியான திருமதி பரமேஸ்வரி பாலசிங்கம் பூச்செண்டு கொடுத்து வரவேற்றார். திருமதி. பஞ்சலஷ்மி பத்மநாதன் மாலை அணிவித்தார்.

பின்பு எல்லோரும் கலந்து உரையாடியும், படங்கள் எடுத்தும், சிற்றுண்டியும், குளிர்பானமும் அருந்தி மகிழ்ந்தார்கள். அதனைத் தொடர்ந்து திருமதி. பஞ்சலஷ்மி செல்வி, இந்திரா பாலசிங்கத்தையும், திருமதி. சாவித்திரி மகேசனையும் வாழ்த்தி எழுதிய கட்டுரையை வாசித்தார். இந்த தேநீர் விருந்து வைபவம் மாலை 06.30 மணிக்கு இனிதே நிறைவு பெற்றது.

செல்வி. இந்திரா பாலசிங்கம் அவர்கள் தற்போது அவுஸ்ரேலியாவில் வசிக்கின்றார்கள் அவர்கள் இலங்கைக்கு வருகை தந்திருந்த போது இந்த தேநீர் விருந்து வைபவம் மாணவிகளால் அளிக்கப்பட்டது, இவ் வைபவத்தை ஒழுங்கு செய்த திருமதி சிவச்செல்வி சிவலோகநாதனும் திருமதி குகஜோதி விஜயநாயகமும் பாராட்டுக்கு உரியவர்கள். படம் எடுத்த திரு. இராமலிங்கத்துக்கு எமது நன்றிகள்.

* * * * * * * *

– 6 –

## ஒன்றுகூடல் நிகழ்வும் இராப்போசன விருந்தும்

வெள்ளவத்தை இராமகிருஷ்ண வீதி 53/3 இலக்கத்தில் உள்ள ஷண்முகாஸ் ஹோட்டலில் 22.10.2005 திகதி சனிக்கிழமை இரவு 06.30 மணி தொடக்கம் 08.30 மணி வரைக்கும் நடைபெற்றது.

செல்வி. சற்சொரூபவதி நாதன் பிரதம அதிதி செல்வி. சீதா செல்லையாவுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூச்செண்டு கொடுத்து வரவேற்றார். திருமதி. அபிராமி கயிலாசபிள்ளை தலைமை உரையை நிகழ்த்தினார். திருமதி சிவகாமி அம்பலவாணர் பிரதம அதிதியை அறிமுகம் செய்து வைத்தார்.

பிரதம அதிதி செல்வி. சீதா செல்லையா யாழ். இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவியும், எங்கள் சங்கத்தின் ஆயுட்கால உறுப்பினரும் ஆவர். இவர் றோயல் கல்லூரி முன்னாள் விஞ்ஞான ஆசிரியர். 1992ம் ஆண்டு தொடக்கம் 2000ம் ஆண்டு வரை விஞ்ஞானபிரிவுத் தலைவராக பணிபுரிந்தார். தற்போது Asian International School உபஅதிபர். அத்துடன் க.பொ.த. உயர்தர இரசயான ஆசிரியர்.

திருமதி பரமேஸ்வரி பாலசிங்கம் வரவேற்பு உரையை நிகழ்த்தினார். செல்வி. சீதா செல்லையா பிரதம அதிதி உரையை வழங்கினார். இந்த நிகழ்வை Video Blossom புகைப்படம் எடுத்து உதவினார்கள்.

பின்பு எல்லோரும் கலந்து உரையாடி இரவுப் போசனத்தை உண்டு மகிழ்ந்தார்கள். இவ்விழா இனிதே நிறைவு பெற்றது.

* * * * * * * *

– 7 –

கல்லூரியின் 2004ஆம் ஆண்டு சிறந்தமாணவியான செல்வி துளசி கந்தசாமிக்கு பொன்விருது வழங்கினோம்.

2005ஆம் ஆண்டு சிறந்த மாணவியாக செல்வி பாமினி பரஞ்சோதி தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

* * * * * * * *

– 8 –

யாழ் இந்து மகளிர் கல்லூரி மாணவிகளுக்கு உதவி: எங்கள் சங்கத்தின் அன்பளிப்பான ரூபா 500,000/-த்தில் இருந்து வரும் வட்டிப்பணத்தில் 2005ஆம் ஆண்டிற்கு தெரிவு செய்யப்பட்ட 6 மாணவிகளே 2006ஆம் ஆண்டிற்கான உதவிப்பணத்தையும் பெறுகிறார்கள். ஒவ்வொரு மாணவியும் ரூபா 500/- மாதம் தோறும் பெறுகிறார். அவர்கள் பெயர்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

| | |
|---|---|
| செல்வி பிரவீனா பரமேஸ்வரன் 8 டி | செல்வி மயூரிகா வாசுதேவன் 11 எவ் |
| செல்வி தீபிகா ஸ்ரீஸ்கந்தராஜா 8 ஈ | செல்வி ரஜித்தா செல்வராசா 12 |
| செல்வி வஜிதா தவராசா 9 பி | செல்வி மயூரதி குகனேஸ்வரன் 7 ஈ |

2005ஆம் ஆண்டு ஒவ்வொரு மாதமும் மேற்குறிப்பிட்ட மாணவிகள் உதவிப்பணம் பெற்றதை ஊர்ஜிதப்படுத்தி கல்லூரி அதிபர் திருமதி சரஸ்வதி ஜெயராஜ் மாணவிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையொப்பத்துடன் ஒரு கடிதம் எங்கள் சங்கத்திற்கு அனுப்பியுள்ளமை போற்றத்தக்கது.

* * * * * * * *

– 9 –

யாழ் இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை மாணவிகளுக்கு உதவி: எங்கள் சங்கத்தின் அன்பளிப்பான ரூபா 100,000/-த்தில் இருந்து வரும் வட்டிப்பணத்தில் 2005ஆம் ஆண்டிற்கு தெரிவு செய்யப்பட்ட 2 மாணவிகளே 2006ஆம் ஆண்டிற்கான உதவிப்பணத்தையும் பெறுகிறார்கள். ஒவ்வொரு மாணவியும் ரூபா 350/- மாதம் தோறும் பெறுகிறார். அவர்கள் பெயர்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

செல்வி இந்துஜா சந்திரசேகர் – 4 ஏ       செல்வி கார்த்திகா ஸ்ரீஸ்கந்தராஜா – 2 சி

(2005ஆம் ஆண்டு முதலில் தெரிவுசெய்யப்பட்ட செல்வி தனுஜா தனராஜ் இரண்டு மாதங்களில் பாடசாலையை விட்டு விலகியதால் செல்வி கார்த்திகா ஸ்ரீஸ்கந்தராஜா தெரிவு செய்யப்பட்டார்)

* * * * * * * *

– 10 –

இணையத்தளம்: எங்கள் சங்கம் அமைத்த www.jhlc.lk என்ற இணையத்தளம் எங்கள் கல்லூரிக்கும், வெளிநாடுகளிலுள்ள பழைய மாணவிகளுக்கும், பழைய மாணவிகள் சங்கங்களுக்கும் ஒரு தொடர்பு சாதனமாக உள்ளது.

கனடாவில் வசிக்கும் திருமதி. துஷ்யந்தி என்பவர் தமது தாயாரின் சார்பாக யாழ். இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை வறிய மாணவிகளுக்கு பயன்படுத்துமாறு 10,000/- ரூபாவை எமது யாழ் தேசிய சேமிப்பு வங்கி நிதியத்தில் வைப்பில் வைத்துள்ளார். அத்துடன் மாணவிகள் ஆங்கிலக் கல்வி கற்பதற்கு வசதியாக இருக்க வேண்டும் என்பதற்காக 10 ஆங்கிலக் கதை புத்தகங்கள் வேண்டி அனுப்பியிருந்தார். அப்புத்தகங்களை உலககற்றாடல்தினப் போட்டிக்கு கொழும்பிற்கு வருகை தந்திருந்த போது அதிபரிடம் கையளித்தோம்.

* * * * * * * *

– 11 –

உலககற்றாடல்தினப் போட்டிக்கு கொழும்பிற்கு வருகை தந்த யாழ். இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை மாணவிகளுக்கு திருமதி அபிராமி கயிலாசபிள்ளையும், திருமதி விமலா மணிவாசகனும் உணவளித்து உபசரித்தார்கள். மறுபடியும் பரிசு பெறும் பொருட்டு கொழும்பிற்கு வருகை தந்த போது நாடகம் பார்ப்பதற்கு சங்க அங்கத்தவர்களை அதிபர் அழைத்த போது திருமதி விமலா மணிவாசகன் போய்ப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்த்தார்.

யாழ். இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை மாணவிகள் செயற்படுத்திய சாதனைகள்

(1). தேசிய கல்வியியற் கல்லூரியினால் நடத்தப்படும் அழகெழல்–2005 நிகழ்வில் மாவட்டம்

1. கிராமிய நடனம் (உழவர் நடனம்) குழு 1ம் இடம் பணப்பரிசு 2000 ரூபா
2. சிறுவர் நாடகம் (ஒற்றுமையே பலம்) 1ம் இடம் பணப்பரிசு 2000 ரூபா
3. இசையும் அசைவும் குழு 2ம் இடம் பணப்பரிசு 1000 ரூபா

(2). அழகெழல்–2004
மாவட்டம்

1. கிராமிய நடனம் (குறவன் குறத்தி) குழு 1ம் இடம் பணப்பரிசு 3000 ரூபா
2. இசையும் அசைவும் (மீனவ நடனம்) 1ம் இடம் பணப்பரிசு 3000 ரூபா

(3). உலகசுற்றாடல் தினம்–2005 நாடகம் திறந்த போட்டி வயது கட்டுப்பாடு இல்லை "வனத்திற்கு வாழ்வளிப்போம்"

1. மாவட்டம் 1ம் இடம் பணப்பரிசு 10,000 ரூபா
2. தேசியமட்டம் 2ம் இடம் பணப்பரிசு 15,000 ரூபா

மாணவிகள் பெற்றுத்தந்த பணப்பரிசுடன் மேலதிகமாகப் பணம் போட்டு 50,750ரூபாவுக்கு 'யமகா PSRSSO' ஓகன் மாணவிகன் தேவைக்காகக் கொள்முதல் செய்யப்பட்டது.

(4). சிறுவர் அரங்கு: ஒற்றுமையே பலம் வலயம் 1ம் இடம்.

தமிழ் மொழித்தினப் போட்டி–2005

1. செல்வி அர்ச்சனா சிவராசா (வாசிப்பு) வலயம் 1ம் இடம். மாவட்டம் 2ம் இடம்.
2. செல்வி துவாரகா ஞானசேகரம் (ஆக்கத்திறன் வெளிப்பாடு) வலயம் 1ம் இடம். மாவட்டம் 2ம் இடம்.
3. செல்வி தனுஜா அமிர்தலிங்கம் வலயம் 2ம் இடம்.
4. செல்வி ஸ்ரீதரா வரதராஜா (நடனம்தனி) வலயம், மாவட்டம், மாகாணம் 1ம் இடம். தேசியமட்டம் 2ம் இடம்.

ஆங்கில நாடகம் "ஆரம்பபிரிவு"

1. God's grace நாடகம் வலயம் 1ம் இடம். மாவட்டம் 2ம் இடம்.

ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சை–2005:
பரீட்சைக்கு தோற்றியோர்: 134 மாணவிகள். சித்தி பெற்றறோர்: 048 மாணவிகள். அரசாங்க உதவிப் பணம் பெற தகுதியானவர்கள் 033 மாணவிகள். பாடசாலை மட்டத்தில் முதல் மூன்று இடங்களையும் பெற்றவர்கள்: (1). செல்வி கனிமொழி சுதானந்தராஜா – 166 புள்ளிகள். இவர் மாவட்டமட்டம் 7ம் நிலையில் உள்ளார். இவர் முதல் 10 மாணவர்களுள் பெண்களில் முதல் நிலையில் உள்ளார். (2), செல்வி திவ்யா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜெனானந்தராஜன் – 156 புள்ளிகள். (3). செல்வி சோபனா பாலகுமாரன் 154 புள்ளிகள்.

* * * * * * * *

– 12 –

யாழ். இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை பழைய மாணவிகள் சங்கத்தின் தலைவி தமது பாடசாலையின் வெள்ளிவிழாவின் போது (2004ம் ஆண்டு) உதயன் பத்திரிகையில் பிரசுரிக்க எங்கள் சங்கத்திடம் ஆசிச் செய்தி கேட்டிருந்தார். அதை திருமதி சிவகாமி அம்பலவாணர் எழுதிக் கொடுத்தார். அச்செய்தி ஆண்டு அறிக்கையின் பின் வருகின்றது.

திருவாசக மடத் திறப்புவிழாவுக்கு எங்கள் சங்க அங்கத்தவர்களை திருமதி. லோகநாயகி அருளலிங்கம் அழைத்திருந்தார். சங்கத்தின் சார்பில் திருமதி அபிராமி கயிலாசபிள்ளையும், திருமதி பரமேஸ்வரி பாலசிங்கமும் சென்றிருந்தார்கள். திருவாசக மடத் திறப்புவிழாச் செய்தி ஆண்டு அறிக்கையின் பின் வருகின்றது.

யாழ். இந்து மகளிர் கல்லூரி அதிபர் திருமதி சரஸ்வதி ஜெயராஜ் அதிபர் பதவியில் இருந்து ஓய்வு பெறுகின்றார். அவரைப் பாராட்டி விழா எடுத்த போது உதயன் பத்திரிகையில் பிரசுரிக்க எங்கள் சங்கத்திடம் பாராட்டு மடலை ஆசிரிய குழுவினரும், யாழ்ப்பாணம், யாழ். இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்கத்தின் உபதலைவியும் கேட்டிருந்தார்கள். அதை சங்கத்தின் சார்பில் திருமதி அபிராமி கயிலாசபிள்ளை எழுதிக் கொடுத்தார். "ஓய்வு பெறும் அதிபர் திருமதி சரஸ்வதி ஜெயரா ஜ் அவர்களின் சேவை நலன் பாராட்டு விழா" என்னும் தலைப்பில் 2006–01–15ம் திகதி உதயன் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டது. பாராட்டு மடல் கீழே தரப்பட்டுள்ளது.

## பாராட்டு மடல்

திருமதி சரஸ்வதி ஜெயராஜ்

யாழ் இந்து மகளிர் கல்லூரியின் அதிபராக கடமையாற்றி கல்லூரியை அதன் பழைய நிலைக்கு உயர்த்துவதில் வெற்றி கண்ட அதிபர் திருமதி சரஸ்வதி ஜெயராஜ்



அவர்கள் எமது சங்கத்துடன் ஒரு சகோதரி போன்று நெருங்கிப் பழகி அந்த அன்பின் அடிப்படையில் கல்லூரிக்கு எம்மாலான உதவிகளை வழங்க உதவியவர் ஆவர்.

எமது சங்கத்தின் பல வைபவங்களில் அவர் கலந்து கொண்டு உரை ஆற்றியுள்ளார். சொல்லாற்றல் மிக்க அவரின் நிதானமான அறிவுபூர்வமான பேச்சுக்கள் அவரது ஆளுமைக்கும், நிர்வாகத் திறனுக்கும் சான்றாக எம்மை வியப்பிலாழ்த்தின.

அத்தியாவசிய தேவை எது என்பதை பண்பாக எம்மிடம் எடுத்துக்கூறி எம்மாலான நிதியுதவியை நாம் வழங்கியதும், தேவைகளை உடனடியாக பூர்த்தி செய்து அது பற்றி எமக்கு அறிவித்துவிடும் கடமையுணர்வை அவர் கொண்டிருந்தார். பல தடவைகள் எமது வேண்டுகோளை ஏற்று தனது அசௌகரியங்களையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருட்படுத்தாது நிகழ்ச்சிகளைத் திறம்படத் தயாரித்து மாணவிகளை கஷ்ட சூழல்களிலும் பஸ்ஸில் ஏற்றி வந்து கொழும்பில் எமது சங்க ஆதரவில் நிகழ்ச்சிகளை மேடையேற்றச் செய்த அவரது துணிவையும், கல்லூரிக்கான அர்ப்பணிப்பையும் பாராட்டக் கடமைப்பட்டுள்ளோம்.

எமது சங்க உத்தியோகத்தர்களை புகழ் பூத்த மாணவியராக கல்லூரிக்கு அறிமுகம் செய்ய பரிசளிப்பு விழாக்களின் போது அதிதிகளாக அழைத்தது மாத்திரமன்றி இங்கிருந்து சென்ற அத்தனை அங்கத்தவர்களையும் அன்புடனும், பண்புடனும் உபசரித்து விருந்தோம்பிய பண்பினை எமது சங்கம் பதிவேட்டில் பொன் எழுத்துக்களால் பொறித்து வைத்து என்றும் நினைவுகூரும்.

ஆசிரியப் பெருமக்களின் ஒத்துழைப்பை பூரணமாகப் பெற்று அவர் விஸ்தரித்துள்ள ஆய்வுகூடம், மண்டபத்திற்கான திரையரங்கு மற்றும் புனரமைக்கப்பட்ட, புதிதாகக் கட்டப்பட்ட வகுப்பறைகள் எல்லாமே அவரது அயராத உழைப்பை காண்பிக்கும் சின்னங்களாக உள்ளன. பெயருக்கு ஏற்ப கல்வியறிவுடனும், புத்திசாதுரியத்துடனும், பொறுமையுடனும் அவர் நிதானமாக காரியம் ஆற்றி எமது கல்லூரிக்கு ஆற்றிய தொண்டை நாம் மறவோம். இனிவரும் அதிபரும் தொடர்ந்து எமக்கு ஒத்துழைப்பு நல்கி எம்மாலான உதவிகளை நாம் வழங்க வகைசெய்வார் என்று எதிர்பார்க்கிறோம்.

கல்வி வளர்ச்சிக்கு அதிலும் பெண்களின் கல்வி வளர்ச்சிக்கு திருமதி சரஸ்வதி ஜெயராஜ் ஆற்றிய பணியை கல்லூரியை விட்டுச் சென்ற அத்தனை மாணவிகளும் எங்கிருந்தாலும் நன்றியுடன் பாராட்டுவார்கள் என்பது நிச்சயம். நாமும் அவர் நீடூழி வாழ்ந்து, சகல சௌபாக்கியங்களுடனும் சிறப்புப் பெற வேண்டுமென வாழ்த்துகிறோம்.

திருமதி அபிராமி கயிலாசபிள்ளை
தலைவி
(யாழ் இந்து மகளிர் கல்லூரி
பழைய மாணவிகள் சங்கம் கொழும்பு – சார்பில்)

* * * * * * * *

– 13 –

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை சீனியர் ஒழுங்கையில் வசித்த காலஞ்சென்ற திரு செல்லையா சண்முகத்தின் பிள்ளைகளும் பேரப்பிள்ளைகளும் சேர்ந்து ரூபா 250,000 சேர்த்திருப்பதாக அன்னாரின் பேரப்பிள்ளைகளில் ஒருவரான டாக்டர் எஸ் ஏ பிரதாபர் தலைவி திருமதி அபிராமி கயிலாசபிள்ளைக்குத் தெரிவித்திருந்தார்.

இப்பணத்தை நம்பிக்கை நிதியம் ஒன்றில் வைப்பீடு செய்து அதிலிருந்து வரும் வட்டிப்பணத்தை யாழ் இந்து மகளிர் கல்லூரியில் படிக்கும் வறிய மாணவிகளுக்கு உதவுமாறும் டாக்டர் பிரதாபர் தலைவியைக் கேட்டுக்கொண்டார்.
யாழ் நகரில் நிலவும் தற்போதைய சூழலில் இப்பணத்தை அங்கு வைப்பீடு செய்வது கஷ்டமாக இருக்கும் எனவும் அப்பணத்தை எங்கள் சங்கம் மூலம் கொழும்பில் வைப்பீடு செய்து வட்டிப்பணத்தைக் கல்லூரிக்கு அனுப்புமாறும் கல்லூரி அதிபர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமதி ஜெயராஜா கேட்டுக் கொண்டார்.

அதன்படி எங்கள் சங்கம் மூலம் அப்பணத்தை வைப்பீடு செய்துள்ளோம்.

* * * * * * * *

எங்கள் சங்கம் வடகீழ் பிராந்திய பாடசாலைகளின் பழைய மாணவர் சம்மேளனத்தில் (வ. கீ. பி. பா. ப. மா. சம்) ஒரு அங்கத்துவ சங்கமாக தொடர்ந்து இருக்கின்றது. எங்கள் சங்கத்தை இந்த ஆண்டு (2005) பின்வருவோர் பிரதிநிதித்துவப் படுத்தினார்கள்.

திருமதி அபிராமி கயிலாசபிள்ளை,
செல்வி சற்சொரூபவதி நாதன்,
திருமதி சிவகாமி அம்பலவாணர்,
திருமதி விமலா மணிவாசகன்,
செல்வி சிவமலர் சுப்பிரமணியம்

அத்துடன் திருமதி அபிராமி கயிலாசபிள்ளை சம்மேளனத்தின் பொருளாளராகவும் திருமதி சிவகாமி அம்பலவாணர் ஆரம்பத்தில் செயற்குழு உறுப்பினராகவும் பின்பு பதில் உதவிச் செயலாளராகவும் கடமையாற்றினார்கள்.

* * * * * * * *

எங்கள் சங்கத் தேவைகள் எல்லாவற்றிற்கும் இலவசமாக சரஸ்வதி மண்டபத்தைத் தந்துதவும் இந்து வித்தியா விருத்திச் சபைக்கு நாம் என்றும் கடமைப்பட்டுள்ளோம்.

எங்கள் சங்கக் கணக்குகளை இலவசமாக பரிசோதனை (Audit) செய்து தந்த திரு த. சச்சிதானந்தனுக்கும் இதற்கு உதவிய திருமதி பரமேஸ்வரி சச்சிதானந்தனுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

சங்க அலுவல்களில் என்றும் எனக்கு உதவியாக இருந்த எங்கள் சங்கத் தலைவி திருமதி அபிராமி கயிலாசபிள்ளைக்கும், உப தலைவி செல்வி சற்சொரூபவதி நாதனுக்கும், பொருளாளர் திருமதி சிவகாமி அம்பலவாணருக்கும், நிர்வாகக் குழு அங்கத்தவர்களுக்கும் நான் நன்றிகூறக் கடமைப் பட்டுள்ளேன்.

எங்கள் சங்க வளர்ச்சிக்கும் கல்லூரி வளர்ச்சிக்கும் அருள்பாலிக்க நடுத்தோட்ட இராஜவரோதயப் பிள்ளையாரைத் துதிக்கின்றேன்.

திருமதி விமலா மணிவாசகன்
கௌரவ செயலாளர்
11.02.06

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# இளமையில் கல்வி சிலையில் எழுத்து

யாழ். இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை வெள்ளிவிழாவை காண்கின்றது என்பதையிட்டு எங்கள் சங்க அங்கத்தவர்கள் மிகவும் மகிழ்ச்சி அடைகிறார்கள். இப்பாடசாலை கடந்த இருபத்து ஐந்து ஆண்டு காலமாக யாழ்ப்பாணத்தில் இந்துச் சிறுமிகளின் கல்விக்கு "இளமையில் கல்வி சிலையில் எழுத்து" என்பதற்கு அமைய, உறுதியான அடித்தளம் இட்டு அவர்களின் இடைநிலை மற்றும் உயர் கல்வி சிறப்புற அமைய உதவி வருகின்றது.

யாழ். இந்து மகளிர் கல்லூரி, யாழ். இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை ஆகியவற்றின் வளர்ச்சியிலும் இந்தக் கல்விக்கூடங்களில் கல்வி கற்கும் மாணவிகளின் வளர்ச்சியிலும் நாம் மிகுந்த ஈடுபாடு கொண்டுள்ளோம்.

எமது யாழ்நாத சஞ்சிகை எங்கள் சங்க செயற்பாடுகளை வெளிக்கொண்டு வரும் ஓர் ஆவணமாக ஆண்டிற்கு ஒருமுறை மலர்கின்றது. அத்துடன், உலகளாவிய ரீதியிலுள்ள மற்ற பழைய மாணவிகள் சங்கங்களும், பழைய மாணவிகளும் ஒருவருடன் ஒருவர் தொடர்புகொண்டு இக்கல்லூரிகளின் வளர்ச்சியை வளமாக்கும் வண்ணம் www.jhlc.lk என்ற இணையத் தளத்தையும் உருவாக்கி உள்ளோம்.

யாழ். இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை இவ்வெள்ளிவிழாக் கொண்டாட்டங்களைச் சிறப்பாக நடத்தி மேலும் வளர்ச்சியடைந்து தனது அளப்பரிய பணியை ஆற்ற அருள்செய்ய வேண்டும் என்று அருட்கடலாகிய இறைவனை எங்கள் சங்க அங்கத்தவர்களுடன் சேர்ந்து துதிக்கின்றேன்.

திருமதி. சிவகாமி அம்பலவாணர் கௌரவ செயலாளர்,
யாழ். இந்து மகளிர் கல்லூரி, ப.மா.ச கொழும்பு.

நன்றி :- உதயன் 20-11-2004 பக்கம் 8, பக்கம் 9

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# திருக்கேதீச்சரத் திருத்தலத்தில் மீளமைக்கப்பட்டுள்ள திருவாசக மடத் திறப்புவிழா

'வங்கம் மலிகின்ற கடல் மாதோட்டநன்னகரில்' பங்கம் செய்த பிறை சூடினன் பாலாவியின் கரைமேல் தெங்கம் பொழில் சூழ்ந்த திருக்கேதீச்சரத்தின் தென்பால் சேர் கந்தையா வைத்தியநாதன், சபாரத்தினம் சுவாமிகளின் துணையுடன் 1952ஆம் ஆண்டில் ஸ்ரீமத் சரவணமுத்துச் சுவாமிகளால் திருவாசக மடம் நிறுவப்பட்டது. இம்மடம் 30 ஆண்டுகளுக்குமேல் அரும்பணியாற்றியது. இதனை இயக்கிய சரவணமுத்துச் சுவாமிகள் சைவ சமய எழுச்சி நிலையமாகத் திருவாசக மடத்தை மிளிரச் செய்தமை நாடறிந்த உண்மை.

இம்மடம் அருளிலிகளால் அழிக்கப்பட்டதாயினும் சிவநெறிச் செம்மல் சி. சரவணமுத்துச் சுவாமிகளின் பிரார்த்தனையாலும், ஈழத்துச் சிவனடியார் திருக்கூட்டத்தினரின் முயற்சியாலும் திருக்கேதீச்சரத்தின் வடக்கு வீதியில் தற்போது புதிய திருவாசக மடம் அமைக்கப்படத் திருவருள் உதவிற்று.

இப்புதிய திருவாசக மடம் மேன்மை கொள் சைவநீதி எழுச்சி பெறப் பணியாற்றும் செயலகமாயும், அமரத்துவமடைந்த சிவத் தொண்டர் சரவணமுத்துச் சுவாமிகளுக்கு நினைவாலயமாகவும் ஈழத்துச் சிவனடியார் திருக்கூட்டத்தினரால் சமர்ப்பணமாக்கப்படுகின்றது.

இதனைத் திருக்கேதீச்சரத் திருப்பணிச்சபைத் தலைவர் மூதறிஞர் சிவமாமணி இ. நமசிவாயம் அவர்கள் மகாசிவராத்திரி தினமான 08.03.2005 செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்குத் திறந்து வைத்துள்ளார்.

அதனை தொடர்ந்து சிவனடியார் கந்தையா இரத்தினசிங்கம் தலைமையில் திருவாசக முற்றோதல் நிகழ்வும், அடியார்க்கு அமுது செய்வித்தலும், இடம் பெற்றது. இவை இடம் பெறத் திருவருள் பாலித்துள்ளது.

திருமதி. லோகநாயகி அருளலிங்கம்
(திருவாசக மடத்திருப்பணிச் சேவையில்)


நன்றி: வீரகேசரி வார வெளியீடு 27.02.2005

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கௌரவ நிகழ்வு: இடமிருந்து – வலமாக சங்கச் செயலாளர் திருமதி விமலா மணிவாசகன், உபதலைவி திருமதி பரமேஸ்வரி பாலசிங்கம், உபதலைவி செல்வி சற்சொரூபவதி நாதன், தலைவி திருமதி அபிராமி கயிலாசபிள்ளை, போஷகர் திருமதி லீலா நாகரத்தினம், உபதலைவி திருமதி தயாநிதி செல்வநாயகம். பொருளாளர் திருமதி சிவகாமி அம்பலவாணர்
குறிப்பு பக்கம் 48

செல்வி சற்சொரூபவதி நாதனின் கௌரவ இணைப்பிதழ் வெளியீடு




பிரதம அதிதி செல்வி மாலா சபாரட்ணம், செல்வி சற்சொரூபவதி நாதனுக்கு பொன்னாடை போர்த்து கௌரவிக்கின்றார். அருகில் தலைவி திருமதி அபிராமி கயிலாசபிள்ளை
குறிப்பு பக்கம் 49

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கம்பன் புகழ் விருது: மேடைக்கு அழைத்து வருவதற்கு தயாராக இருக்கும்போது குறிப்பு பக்கம் 7



வருடாந்த ஒன்று கூடல் நிகழ்வு. குறிப்பு பக்கம் 52



திருமதி அபிராமி கயிலாசபிள்ளைக்கு "கம்பன் புகழ்" விருது கிடைத்தமையைப் பாராட்டிய போது. குறிப்பு பக்கம் 49.

UNIE ARTS, 2330195

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org